விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii


Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 12 திங்கட்கிழமை (24.02.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 067

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# முள்ளிவாய்க்கால் அநீதிகளே ஜெனிவாவில் நீதி கேட்கின்றன



## தீவகத்தில் மாவை பேச்சு

(தீவகம்)

முள்ளிவாய்க்காலில் தமிழ் இனத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளே ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக நீதி கேட்டு போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தி இன்று நிற்கின்றது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தீவகப்பகுதிக்கு நேற்றைய தினம் விஜயத்தை மேற்கொண்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வடக்கு மாகாணசபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் பா.கஜதீபன், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட இளைஞரணியின் செயலாளர் ப.தர்சானந், சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினர் ஞா.கிஷோர் உள்ளிட்டவர்கள் அப்பகுதி மக்களுடன் சந்திப்புக்களில் ஈடுபட்டனர். இதன்போது ஊர்காவற்றுறை நகரிலுள்ள பரலோக மாதா கோவிலில் பிற்பகல் ஒரு மணியள 20 ஆம் பக்கம் பார்க்க..

## ஆளில்லா விமானம் ஆகாயத்தில் நோட்டம்

(கொழும்பு)

வனாந்தரங்களில் இடம்பெறுகின்ற குற்றங்களை கண்டுபிடிப்பதற்காக ஆளில்லா விமானங்களை வானத்திற்கு அனுப்பி தரவுகளை பெற்றுக்கொள்வதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இடம்பெற்ற யுத்த காலத்தில் புலிகள்இருந்தவனாந்தரங்களுக்கு மேலே சென்று தரவுகளை திரட்டிவந்து இராணுவத்திற்கு வழங்கிய கேலமா என்றழைக்கப்படும் ஆளில்லா விமா 20 ஆம் பக்கம் பார்க்க..

## ஆப்கான் அதிபரின் விஜயம் ஒத்திவைப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தான் அதிபர் ஹமீது கர்சாய் இலங்கைக்கு மேற்கொள்ள விருந்த பயணம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் குனார் பிராந்தியத்தில் சோதனைச்சாவடி ஒன்றின் மீது தலிபான்கள் மேற்கொண்ட தாக்குதலில் குறைந்தப்பட்சம் 20 ஆப்கான் படையினர் கொல்லப்பட்டதை தொடர்ந்தே ஆப்கானிஸ்தான் அதிபரின் பயணம் ஒத்தி 20 ஆம் பக்கம் பார்க்க..

## பால்மாவின் விலை மேலும் அதிகரிக்கும்




(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் மேல் மற்றும் தென் மாகாண சபை களின் தேர்தலுக்கு பிறகு ஒரு கலோ பால் மாவின் விலை மேலும் 50 முதல் 60 ரூபாயால் அதிகரிக்கப்படலாம் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு கிலோ கிராம் பால்மாவிற்கு அரசாங்கம் அறவிட்டு வந்த 107 ரூபாய் வரியானது இந்த மாத ஆரம்பித்தில் 57 ரூபாயாக குறைக்கப் 20 ஆம் பக்கம் பார்க்க..

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு இந்தியாவிற்கு அழுத்தம் கொடுங்கள்


## தமிழக மாணவர்களிடம் கெலம் மக்ரே தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமை கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வர இந்தியாவுக்கு தமிழக மாணவர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று சனல் 4 ஆவணப்பட இயக்குநர் கெலும் மக்ரே வலியுறுத்தியுள்ளார்.

புதிய உள்ளடக்கத்துடன் கூடிய இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப்படம் நேற்று முன்தினம் மாலை சென்னை கோயம்பேடு காய், கனி அங்காடி எதிரில் உள்ள ராயல் பிளாஸா ஒட்டலில் தமிழக மாணவர்களால் திரையிடப்பட்டது.

ஏற்கெனவே வெளிவந்திருந்த குறித்த ஆவணப்படத்தில் ஆறு



நிமிடங்கள் புதிய காட்சிகள் இணைகப்பட்டிருந்தது. மாணவர்கள், இளைஞர்கள், தமிழ் உணர்வாளர்கள், சமூக ஆர்வலர்கள் என்று ஏராளமானோரால் ஹோட்டலின் கீழ்த் தளப் பகுதி நிரம்பி வழிந்தது.

காணொளி மூலமான சனல் 4 ஹெலம் மக்ரே இன் அறிமுக உரையுடன் ஆவணப்படம் திரையிடப்பட்டது. திரையிடல் முடிநததன் பிறபாடு, 19 ஆம் பக்கம் பார்க்க..

# பிரபாகரனின் ஆவியே விக்னேஸ்வரன்; அரசை எச்சரிக்கிறது பொது பல சேனா

(கொழும்பு)

வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் செயற்பாடுகளும் கருத்துக்களும் நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் மீண்டுமொரு அழிவை கொண்டு வருவதற்கான சமிக்ஞையாகவே தென்படுகிறது. எனவே புலிகள் இயக்கத்தால் செய்ய முடியாது போனவற்றை செய்ய முயலும் பிரபாகரனின் ஆவியே விக்னேஸ்வரன் என்று பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

வட மாகாண மக்கள் முறையான அடிப்படை வசதிகளின்றி பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகளை தீர்த்து வைத்து அவர்களை இயல்பு நிலைக்கு கொண்டுவர வேண்டிய பொறுப்பு முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு உண்டு. அதையெல்லாம் கண்டு கொள்ளாமல் தனியான விமான சேவை மற்றும் கப்பல் சேவைகளை பற்றி பேசுவதானது, மீண்டும் பிரிவினைவாதத்திற்கே வழிகோலும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பலாலி-திருகோணமலையிலிருந்து இந்தியாவிற்கு விமான சேவையை ஆரம்பிப்பதுடன் காங்கேசன்துறை துறைமுகத்தை வர்த்தகத் துறைமுகமாக்க வேண்டுமென்னும் பிரேரணை வட மாகாண சபையில் அண்மையில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

அத்துடன் வட மாகாண சபைக்கு விமான சேவை மற்றும் கப்பல் சேவை தொடர்பாக எந்தவிதத் தீர்மானத்தையும் மேற்கொள்ளும் 20 ஆம் பக்கம் பார்க்க..



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் வருகையின்போது முள்ளிவாய்க்காலில் அகற்றப்பட்டிருந்த இறுதிப்போரின் எச்சங்கள் முள்ளிவாய்க்கால் கடற்கரையோரம் (பனையடி) குவிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. இத்தகவலை வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரில் உறுதிப்படுத்தியுள்ளார்.

# இலங்கைக்கு எதிராக தீர்மானம் வேண்டாம்

## தெற்காசிய நாடுகளிடம் வாசு கோரிக்கை

(நியூயோர்க்)

அமெரிக்காவின் செயற்பாடுகள் முழு தெற்காசிய பிராந்தியத்திறகும் அச்சுறுத்தலாக அமைந்து விடும் என அரசாங்கம் எச்சரித்துள்ளது.

அடுத்த மாதம் ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக கொண்டு வரும் தீர்மானததை நிறைவேற்ற தெற்காசிய நாடுகள் இடமளிக்க கூடாது என அமைச்சர் 20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மகளிர் படையணி தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் மகளிர் படையணியில் இணைந்துகொள்ள விருப்பமுடைய முல்லைத்தீவு மாவட்ட தமிழ் பேசும இளம் யுவதிகளிடமிருந்து இலங்கை இராணுவ மகளிர் படையணி விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இது தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இராணுவத்தினரால விநியோகம் செய்யப்பட்டன.

திருமணமாகாத 18 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட 8ஆம் தரம் அல்லது 9ஆம் தரத்தில் சித்தி பெற்றிருப்பதுடன், விளையாட்டுத்துறை, பொறியியல், பான்ட் வாத்தியம் உள்ளிட்ட வேறு துறைகளில் தேர்ச்சியுள்ளவர் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன், ஆங்கில அறிவு, கணணி அறிவு என்பன விஷேடமாக கவனத்தில் கொள்ளப்படவுள்ளன. மகளிர் படையணியில இணைந்து கொள்ளும் தொண்டர் சிப்பாய்க்கு மாதாந்தம் 30 ஆயிரம் ரூபா வரை கொடுப்பனவு வழங்கப்படுவதுடன், இலவசமாக சீருடை, உணவு, தங்குமிடவசதி, மருத்துவம், வாண்மை விருத்தி பயிற்சி என்பனவும வழங்கப்படவுள்ளன.

அத்துடன் 15 வருடகால சேவையின் பின்னர் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ள முடியும். குறித்த மகளிர் படையணியில் இணைந்து கொள்ள ஆர்வமுள்ளவர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை 591ஆவது படையணி - முல்லைத்தீவு, 592ஆவது படையணி நாகன்சோலை, 593ஆவது படையணி-நாயாறு, 641ஆவது படையணி-புதுக்குடியிருப்பு தெற்கு, 642ஆவது படையணி-ஒட்டுசுட்டான், 643ஆவது படையணி-முத்தையன்கட்டு, 681ஆவது படையணி- முள்ளிவாய்க்கால் மேற்கு, 682ஆவது படையணி - புதுக்குடியிருப்பு, 683ஆவது படையணி - உடையார்கட்டு ஆகிய படைத்தலைமையகங்களில் கையளிக்க முடியும்.

இதேவேளை எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்திலும், 4ஆம் திகதி ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திலும், 5ஆம் திகதி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திலும் இது தொடர்பாக நேர்முகப் பரீட்சைகள் இடம் பெறும் எனவும் குறித்த துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# மாகாணசபைத் தேர்தல்

## வன்முறையிலீடுபட்ட 33பேர் கைது

மேல் மற்றும் தென் மாகாண சபை தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டதன் பேரில் 33 பேர் கைது செய்யப்பட்டுள்ள அதே வேளை கைது செய்யப்பட்டவர்களை விட கைது செய்யப்படாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக "கபே" தேர்தல் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்தது.

இதேவேளை அம்பாந்தோட்டையில் தேர்தல் வன்முறை சம்பவங்களும் சட்ட விரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அதிகரிப்பதுடன் கொழும்பு மாவட்டத்தில் சாதாரண நிலைமையே காணப்படுவதாகவும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக "கபே" அமைப்பின் நிறைவேற்று அதிகாரி கீர்த்தி தென்னக்கோன் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் மார்ச் மாதம் 29ஆம் திகதி நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மேல் மற்றும் தென் மாகாண சபை தேர்தல் சூடுபிடிக்கும் அதேவேளை அதற்கேற்றால் போல் வன்முறை சம்பவங்களும் சட்டவிரோத தேர்தல் பிரசார நடவடிக்கைகளும் அதிகரித்த வண்ணமே காணப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் குறித்த மாகாண சபை தேர்தலில் தற்போது 300 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதுடன் வன்முறை சம்பவங்களிலும் ஈடுபட்ட 33 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இருப்பினும் வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டதன் பேரில் கைது செய்யப்பட்டவர்களை விடவும் அதிகமான குற்றவாளிகள் பலர் வெளியே நடமாடுகின்றனர்.

ஆகையால் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடத்த வேண்டுமாயின் வன்முறை சம்பவங்களில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்ய வேண்டும். ஆனால் நாட்டில அவ்வாறான நிலைமையை காண முடியாதுள்ளது.

இதேவேளை கொழும்பு மாவட்டத்தில் கடுவலை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பிரதேசங்களில் சாதாரண நிலைமையே காணப்பட்டாலும் அம்பாந்தோட்டையில் தேர்தல் வன்முறை சம்பவங்களுடன் சட்டவிரோதமான தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அதிகரித்த வண்ணமே காணப்பட்டு வருகின்றது.

எனவே சட்டவிரோத தேர்தல் பிரசாரங்களை தடை செய்யாவிடின் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை எதிர்நோக்க முடியாது என்றார். (செ-11)

# தேங்காய்ச் சண்டை இருவர் காயம்

(கொழும்பு)

மன்னம்பிட்டிய கங்கை ஆலயத்திற்கு சிதறுதேங்காய் உடைக்கச்சென்ற ஜனநாயக கட்சியின் உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வடமத்திய மாகாண சபையின் அரசியல்வாதிகள் இருவரின் ஆதரவாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பில் இருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த குழுவினர் சிதறுதேங்காய்களில் சண்டைபிடித்து கொண்டதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-11)


**பிரத்தியேக/குழு வகுப்புக்கள்**

**A/L கணக்கீடு**

(தமிழ், ஆங்கில மொழி மூலம்)

**ஆங்கிலம்**

(அனைத்து பிரிவினருக்கும்)



(5678)

**தொடர்பு: 0779232455**


# கறுப்புப் பணத்தைக் கொண்டு

## தீர்வையற்ற வாகனங்கள் கொள்வனவு

(கொழும்பு)

கறுப்புப் பணத்தைக் கொண்டு தீர்வையற்ற வாகனங்கள் கொள்வனவு செய்யப்படுவதாகத தெரிவிக்கப்படுகிறது. பணச் சலவையாளர்கள் கறுப்புப் பணத்தை இவ்வாறு பயன்படுத்திக் கொள்கின்றனர்.

தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரத்தைக் கொண்டு கொள்வனவு செய்யப்படும் வாகனங்களின் மூலம் 8 இலட்சம் ரூபா முதல ஒரு மில்லியன் ரூபா வரையில் லாபமீட்டப்படுகின்றது. பணச் சலவையில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட 5 ஆயிரம் பேருக்கு தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது. அனுமதிப்பத்திரங்களை விற்பனை செய்து விட முடியும் என்ற காரணத்தினால் பலர் வாகன அனுமதிப்பத்திரங்களை விற்பனை செய்து விடுகின்றனர்.

இதனால் வாகன அனுமதிப்பத்திரங்களைப் பயன்படுத்தி நிதிச்சலவையில் ஈடுபடுவோர் குறித்து அவதானத்துடன் இருக்குமாறு சுங்கப் பிரிவினருக்கு மத்திய வங்கி ஆலோசனை வழங்கியுள்ளது. (செ-11)


**புதிய யோசனைகள், புதிய சந்தைகள்...**

**சாவகச்சேரி பால்பண்ணை அபிவிருத்தி நிலையத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தல்.**

சாவகச்சேரியில் அமைந்துள்ள பால்பண்ணை அபிவிருத்தி நிலையம் இன்று ஜேர்மன் தூதுவர், அதிமேதகு டாக்டர் ஜர்கன் மோஹாட் (Dr.Jurgen Mohard) அவர்களின் முன்னிலையில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர் திரு. எஸ். அருமைநாயகம் அவர்களினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படும். GIZ - SME அபிவிருத்தி மற்றும் அபிவிருத்தி அலுவலகத்துக்கான Tetra Laval Food உடன் ஒன்றாக இணைந்து கார்கில்ஸ் (சிலோன்) PLC இனால் இணைந்த கருத்திட்டமாக இந்தப் பிராந்தியத்தில் முன்னணி பால் பதனிடுவோர், பால் பண்ணையாளர்களுடன் இணைந்து வெப்ப மண்டல பிராந்தியத்தில் பால் பண்ணைத் தொழிலில் வல்லுநர்களையும் ஒன்றாகக் கொண்டு வருகின்றதாகையால் பால்பண்ணை அபிவிருத்தியில் புதிய அத்தியாயமொன்று ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.







பண்ணைக் கைத்தொழிலில் அண்மைக்கால அபிவிருத்திகளில் சாவகச்சேரி மற்றும் மீசாலையில் உள்ள 400 க்கும் மேற்பட்ட பண்ணையாளர்களுக்கு தனிப்பட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வழி கிடைக்கும் என்பதுடன் எவ்வாறு தமது பால் உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதென்பது மற்றும் பண்ணைக் கைத்தொழிலில் அண்மைக்கால அபிவிருத்திகள் பற்றிய அறிவையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். மேலும் அவர்கள் முன்னணியில் உள்ள நாடளாவிய பால் பதனிடுவோர் மற்றும் சிரேஷ்ட சந்தைச் சங்கிலியுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளனர்.

அதன் மூலம் பண்ணையாளர்களுக்கு அவர்களது பால் உற்பத்திகளுக்கு கவர்ச்சிகரமான விலைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். இவ்வாறான தலையிடுதலின் ஊடாக பண்ணையாளர்கள் அவர்களது வருமானங்களில் ஆகக் குறைந்தது 50 சதவீத அதிகரிப்பை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகவே பண்ணையாளர்கள் பால் பண்ணையை அவர்களது முதன்மை வருமானத்திற்கு ஆதாரமாக இரண்டாம் நிலை வருமானமாக நகர்த்துவதற்கு இயலக் கூடியதாக இருக்கும்.

தொடர்ச்சியான பண்ணைப்பயிற்சி அளித்தல் மற்றும் ஏனைய உதவிகள் வழங்குவதன் ஊடாக பால் பண்ணை நடாத்துவதன் மூலம் பால் உற்பத்தி மற்றும் வருமானங்களை அதிகரித்துக்கொள்வதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குவதன் பொருட்டு GIZ SME அபிவிருத்தி நிறுவனத்தினால் நான்கு கால்நடை மருத்துவர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். தனிப்பட்ட பண்ணையாளர்களுக்கு தனிப்பட்ட ஆலோசனைகள் வழங்குதல், பகுப்பாய்வு அடிப்படையில் பால் மாதிரிகளை பரீட்சிப்பதற்கு பண்ணையாளர்களுடன் அவர்கள் மிக நெருக்கமாக பணியாற்றுவார்கள்.

பங்களாதேஷ் நாட்டில் Tetra Laval மூலம் பயிற்சியளிக்கப்பட்ட கால்நடை மருத்துவர்களும் செயற்கை முறை சினைப்படுத்தல், தடுப்பூசியேற்றல், முறையான குடற்புழு நீக்கம் போன்ற சிறந்த நடைமுறைகளை பண்ணையாளர்களுக்கு அறிமுகம் செய்தல், உயர் விளைச்சலை உற்பத்தி செய்யக் கூடிய திறமை உள்ள புதிய வகை புல்லை பண்ணையாளர்களுக்கு அறிமுகம் செய்வதன் ஊடாக அவர்களும் கவனம் செலுத்துகின்றனர்.

அதன் மூலம், தரமான மூலப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கும் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான பண்ணையாளர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு உதவிசெய்வதன் பொருட்டு ஒவ்வொரு வருடமும் கார்கில்ஸ் நிறுவனம் நேரடியாகப் பணியாற்றுகின்றது.

தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் அல்லது கார்கில்ஸில் விற்பனை செய்யப்பட்ட உற்பத்திகளின் தரத்தைப் பேணுதல் கம்பனியின் நூற்றாண்டுக்கும் மேலான வர்த்தகம் செய்தல் மற்றும் செயற்பாடுகளை அடைவதற்கான முக்கியமான அளவுகோலாகும். கொள்வனவு செய்யப்பட்ட, பதனிடப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட உணவுகளின் அதி உயர்ந்த தரம், பாதுகாப்பு, சுற்றாடல் மற்றும் சமூக தரங்கள் என்பனவற்றை அடைவதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கார்கில்ஸ் அர்ப்பணித்துள்ளது.

german cooperation DEUTSCHE ZUSAMMENARBEIT

giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH

PROTECTS WHAT'S GOOD Tetra Pak

SINCE 1844 Cargills

(சி-6578)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பிரச்சினை

பிரச்சினை இல்லாத மனிதர்களே இந்த உலகத்தில் இல்லை. ஆனால், எந்தப் பிரச்சினையை எப்படி எதிர்கொள்வது என்பதில்தான் ஒரு மனிதரிலிருந்து இன்னொரு மனிதன் வித்தியாசப்படுகிறான். பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்கிறவர்கள் சாதனைகளைப் படைக்கிறார்கள். மற்றவர்கள் அந்த வெற்றியில் இருந்து நழுவிப் போய்விடுகிறார்கள். இதை விளக்குவதற்கான ஒரு நல்ல கதை இருக்கிறது.

ஒருவர் காட்டுப் பகுதியில் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார். அதில் வாட்டசாட்டமான ஒரு ஆட்டுக்கிடாயும் இருந்தது. மேய்ச்சல் முடிந்த பின்பு அவர் ஆடுகளையெல்லாம் ஓட்டிக் கொண்டு ஊருக்குத் திரும்பும் போது அந்த வாட்டசாட்டமான ஆட்டுக்கிடாய் மட்டும் எப்படியோ மந்தையிலிருந்து நழுவிப் போய் விட்டது. அப்படி மந்தையிலிருந்து நழுவிப் போன கிடாய் காட்டுப் பகுதியில் தனியே போய்க் கொண்டே இருந்தது.

அப்போது, பலத்தமழை பெய்தது. மழையில் நனையாமல் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்காக அது எதிரில் தெரிந்த பாறைக்குள் இருக்கும் குகைக்குள் நுழைந்து கொண்டது. மழைவிட்ட பின்பு வெளியே போய் விடலாம் என்று அது எண்ணியிருந்தது. ஆனால் சிறிது நேரத்தில் அந்தக் குகையை நோக்கி ஒரு சிங்கம் வந்து கொண்டிருந்தது ஆட்டுக்குத் தெரிந்தது.

'ஆகா, நாம் சிங்கத்தின் குகையில் மாட்டிக்கொண்டோமே சிங்கம் வந்தால் நம்மை அடித்து சாப்பிட்டு விடுமோ' என்று அது பயந்தது. ஆனாலும் அந்த ஆட்டுக்கிடாய் மனம் தளர்ந்து விடவில்லை. எப்படியாவது இந்தச் சிங்கத்தை சமாளிக்க வேண்டும் என்று நினைத்தது. உடனே ஒரு தந்திரம் செய்தது. அந்த சிங்கம் குகையின் வாயிலை நெருங்கும் போது உள்ளே இருந்த ஆடு தன் குரலை மாற்றிக் கொண்டு பலமாக சத்தம் போட்டது.

''வாருங்கள் சிங்க ராஜாவே! வாருங்கள். உங்களுக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறேன். நான் இதுவரை 99 சிங்கங்களை அடித்துச் சாப்பிட்ட பயங்கரமான மிருகம். இன்னும் ஒன்று சாப்பிட்டால் நூறாவது விழா கொண்டாடி விடுவேன். அதற்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறேன். சீக்கிரம் உள்ளே வாருங்கள்'' என்று கத்தியது. இதைக்கேட்டவுடன் சிங்கத்துக்கு பயம் தொற்றிக் கொண்டது. 'நம்மைவிட பலசாலியான ஏதோ ஒரு மிருகம் குகைக்குள் இருக்கிறது. உள்ளே போனால் அது நம்மை அடித்து சாப்பிட்டு விடும். இப்போது நாம் என்ன செய்யலாம்?' என்று சிங்கம் யோசனை செய்தது. இப்போது திரும்பவும் அந்த ஆட்டுக்கிடாய் உள்ளே இருந்து முன்னர் சொன்னபடியே சொன்னது.

''உள்ளேவா,உன்னை சாப்பிடப் போறேன் உள்ளேவா உன்னை சாப்பிடப் போறேன்'' என்று இப்படியே திரும்பத்திரும்ப பயங்கரமாக கத்தியது. சிங்கத்துக்கு இப்போது உண்மையிலேயே ஏகப்பட்ட பயம். "மிக பயங்கரமான புது மிருகம் ஒன்று நமது குகைக்குள் நமக்காக காத்துக் கொண்டிருக்கிறது, உள்ளே போனால் நமது ஆயுள் முடிந்து விடும்.

இப்படியே தப்பித்து போய்விடுவோம்'' என்று நினைத்தபடி சிங்கம் ஓட ஆரம்பித்தது. அப்படி அது ஓடிக்கொண்டிருக்கும்போது எதிரில் ஒருநரி வந்தது.

"என்ன சிங்க ராஜாவே! எங்கே ஓடுகிறீர்கள்?'' என்று கேட்டது அந்த நரி.

"என் குகைக்குள்ளே ஏதோ ஒரு புதிய மிருகம் இருந்து கொண்டு என்னைக் கொல்லப்போவதாக சத்தம் போடுகிறது. எனக்கு பயமாக இருக்கிறது'' என்று கூறியது சிங்கம். ''இதற்குப் பயந்து இப்படி ஓடுகிறீர்களே. வாருங்கள் அது என்ன மிருகம் என்று பார்த்து விடுவோம். உங்களை விட பலசாலி யாருமே இந்த உலகத்தில் இல்லை என்று சிங்கத்தை அழைத்தது நரி.

அதற்குச் சிங்கம் சொன்னது. "நாம் போகலாம். ஆனால் கடைசி வரைக்கும் நீ என் கூடவே வரவேண்டும், இருக்கவும் வேண்டும். அதற்காக ஓர் ஒப்பந்தம் செய்துகொள்வோம். இரண்டு பேரோட வாலையும் ஒன்றாக சேர்த்து கட்டிக்கொண்டு சேர்ந்தே போவோம்'' என்றது. சிங்கத்தின் நிபந்தனையை நரி ஏற்றுக்கொண்டது. இப்போது சிங்கமும் நரியும் சேர்ந்து வருவதை ஆட்டுக்கிடாய் உள்ளேயிருந்து பார்த்து 'அடடா இப்போது பெரிய ஆபத்து வந்துவிட்டது' என்று நினைத்தது. என்றாலும் கலங்கி விடவில்லை. இப்போது மிகவும் சாமர்த்தியமாக அது பேசியது.

ஓ நரியாரே! வாங்க வாங்க. வணக்கம். சிங்கம் தப்பித்து ஓடின பின்பு நீங்கள் இங்கே வந்தீர்களா. அப்போதே உங்களைச் சாப்பிட வேண்டும் என்று பார்த்தேன். 'இல்லை நான் சிங்கத்தைப் போய் கூட்டிக்கொண்டு வந்துவிடுகிறேன் என்று சொல்லி விட்டுப் போனீர்களே. சொன்ன மாதிரியே சிங்கத்தையும் அழைத்துக் கொண்டு வந்துவிட்டீர்களே. உங்கள் நேர்மையை நான் பாராட்டுகிறேன். சிங்கத்தை உள்ளே அனுப்புங்கள், அதை உடனே சாப்பிடுகிறேன்''என்று அந்த ஆடு சொல்லியது. உடனே சிங்கம் 'ஆகா! இந்த நரி நயவஞ்சகமாக நம்மை இங்கே கூட்டிக்கொண்டு வந்திருக்கிறதே என்று நினைத்துக் கொண்டது.

உடனே சிங்கம் மறுபடியும் ஓட ஆரம்பித்தது. அதன் வாலில் கட்டப்பட்டிருந்த நரி இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் இருந்த மரங்களில் அடிபட்டு செத்தே போய்விட்டது. பின்பு அந்த ஆட்டுக்கிடாய் சாமர்த்தியமாக தப்பித்து வெளியே வந்து தன்னுடைய ஊரைப் பார்த்து நடைபயணத்தை ஆரம்பித்தது.

**எந்தச் சூழ்நிலையிலும் பிரச்சினைகளை நம்பிக்கையோடு எதிர்கொண்டால் வெற்றி பெறுவது உறுதி என்பதற்கு உதாரணம் இந்தக் கதை.**

ஒரு பேருந்து நிறுத்தத்தில் இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஓர் எக்ஸ்பிரஸ் பேருந்து வந்தது. ஒருவர் அதில் ஏறப் போனார். அங்கிருந்த ஒருவர் சொன்னார் "இதில் ஏறாதீர்கள் டிக்கெட் அதிகம். இதன் பின்னர் சாதாரண பேருந்து வரும். அதில் ஏறினால் டிக்கெட் குறைவு. அதனால் நீங்கள் அதில் ஏறலாம்'' என்று. அதற்கு முதலாமவர் சொன்னார். "இல்லை ஐயா டிக்கெட் எடுக்கிறவர்களுக்குத்தான் இந்தப் பிரச்சினையெல்லாம் எனக்கு ஒன்றும் இல்லை'' என்று சொல்லிவிட்டு வேகமாக ஓடிப்போய் அதில் ஏறிக் கொண்டார்.

*இளசை சுந்தரம்*

# பெரும்பான்மை கட்சிகளினுள் இனவாதம் புரையோடி காணப்படுகின்றது-மனோ

எம்மால் இந்த நாட்டில் ஜனாதிபதியாகவோ, பிரதமராகவோ ஆகிவிட முடியாது. இந்த பதவிகளை வகிக்க எமக்கு தகைமை இல்லை என்றோ, சட்டத்தில் இடமில்லை என்றோ அர்த்தம் கிடையாது.

ஆனால், இந்த பதவிகளை ஒரு தமிழரோ, முஸ்லிமோ அல்ல, ஒரு சிங்கள, கிறிஸ்தவர் கூட வகிக்க முடியாது.

இதற்குக் காரணம், இங்கே அந்தளவுக்கு எல்லா பெரும்பான்மை கட்சிகளுக்குள்ளும் இனவாதம் புரையோடிப்போய் இருக்கின்றது.

இதன் காரணம் யுத்தத்தில் நாம் வெற்றி பெற்று விட்டோம். தமிழர், முஸ்லிம்கள் தோல்வியடைந்து விட்டார்கள் என இவர்கள் அனைவரும் நினைக்கிறார்கள். இதுதான் இன்றைய புது விதி. இதை எக்காரணம் கொண்டும் மறந்துவிடாதீர்கள் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த காலகட்டத்தில், நாம் எம் சொந்தக் காலில் அரசியல் பலத்துடன் இருக்க வேண்டும். அது அவர்கள் விதி என்றால் இதுதான் எங்கள் விதி. அரசியல் பலத்துடன் இந்த நாட்டின் சிங்கள ஜனாதிபதிகளுடனும், சிங்கள பிரதமர்களுடனும், சிங்கள அரசாங்கங்களுடனும் பேரம் பேசி எம் அரசியல், சமூக, பொருளாதார, கலாசார உரிமை களைப் பெற வேண்டும்.

இந்த அரசியல் பலத்தை பெற கடந்த காலங்களில் தமிழருக்கு வெவ்வேறு ஆயுதங்கள் இருந் தன. இன்று எம்மிடம் இருப்பது வாக்குச்சீட்டு என்ற ஒரேயொரு ஆயுதம் மட்டுமே.

ஆகவே வாக்குச்சீட்டு என்ற இந்த ஆயுதத்தை முழுமையாக பயன்படுத்தி மேல்மாகாணத்தில், அரசியல் பலத்தை உறுதிப்படுத்த தயாராகுங்கள். இந்த அரசியல் பலத்தை எனக்கு வழங்கி என் கரங்களை பலப்படுத்துங்கள். நம் வாக்குகளை சிதறடித்து என்னை பலவீனப்படுத்தி விடாதீர்கள்.

இந்தியாவை பாருங்கள். அங்கேயும் எவ்வளவோ இன, மத, மொழி பிரச்சினைகள் இருக்கின்றன.

ஆனால், அதையெல்லாம் மீறி அங்கு நாம் இந்தியர்கள் என்ற உணர்வு இருக்கின்றது. ஆனால் நாம் இலங்கையர்கள் என்ற உணர்வு இங்கு கிடையாது. அதை பெரும் பான்மை சிங்கள இனத்தவர் உணரும்வரைக்கும் மேல்மாகாணத்தில் வாழும் சிறுபான்மையினராகிய நாம் எம் சொந்த பலத்தை ஒருமுகப்படுத்தி உறுதி செய்துகொள்ள வேண்டும். இது காலத்தின் முதற்கட்டாயம்.

காலத்தின் அடுத்த கட்டாயம் என்ன? இந்த அரசியல் பலம், தமது அதிகாரத்தை முறையாக பயன்படுத்தக் கூடிய ஆளுமையுள்ள தலைமையிடம், கட்சியிடம் இருக்க வேண்டும் என்பதுதான் அந்த அடுத்த கட்டாயம்.

பாராளுமன்றத்தில் சபைக் கூட்டங்களிலும், குழுக் கூட்டங்களிலும் தவறாமல் கலந்துகொண்டு பேசி, கருத்துத் தெரிவித்து, வாதத்திற்கு எதிர்வாதம் செய்து, எங்கள் மக்கள் பிரச்சினைகளை தேசிய மக்கள் மன்றங்களில் எடுத்து வைப்பவரகளிடம் இந்த அதிகாரம் இருக்க வேண்டும் என்றார். (அ-2)

# குடிநீர் பாவனைக்கு உதவாத குழாய்க்கிணறு

வவுனியா நகரின் பிரதான தபாலகத்திற்கு முன்பாகவுள்ள குடிநீர் பெற்றுக் கொள்வதற்கான குழாய்க்கிணற்று குடிநீரைக் குடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு பலமாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என அக் குழாய் கிணற்றினைப் பயன்படுத்துவோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரின் ஏ-9 வீதியோரமாகவுள்ள இக் கிணறை வவுனியா தபாலகத்தினர், வீதிப் போக்குவரத்து பயணிகள், வர்த்தகர்கள் எனப் பலரும் பயன்படுத்தி வந்தனர். இக் குழாய் கிணறு தற்போது மேற் பகுதி முற்றாக உடைவடைந்த நிலையில் வெளியில் இருந்து கழிவுகள் உட்செல்லக் கூடியதாகவும் குழாயின் கறல் பிடித்த துகள்கள் நீருடன் கலக்கக் கூடியதாகவும் காணப்படுகின்றது. இதனால் இதனை குடிப்பதற்கு பயன்படுத்த முடியாத நிலை உள்ளபோதும் குடிநீரை பெற்றுக் கொள்ள வேறு கிணறுகள் அருகில் இல்லாமையால் இதனையே மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இது வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ-9-250)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கிளிநொச்சி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 20 | 30 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 120 | 60 |
| தக்காளி | 20 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 |
| கோவா | 30 | 40 | 50 |
| கரட் | 60 | 80 | 70 |
| பூசணி | 20 | 50 | 30 |
| புடோல் | 30 | 50 | 60 |
| வாழைக்காய் | 30 | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 30-90 | 60 | 90 |
| பெரிய வெங்காயம் | 60-75 | 60 | 70 |
| பாகற்காய் | 60 | 100 | 130 |
| வெண்டிக்காய் | 70 | 100 | 40 |
| கருணைக் கிழங்கு | 20 | 50 | 40 |
| பயற்றங்காய் | 100 | 80 | 150 |
| லீக்ஸ் | 50 | 80 | 90 |
| பீற்றூட் | 30 | 40 | 70 |
| கறிமிளகாய் | 60 | 100 | 150 |
| முருங்கைக்காய் | 350 | -- | -- |
| போஞ்சி | 30 | 60 | 80 |
| கத்தரி தம்புள்ள | 10 | -- | 40 |
| கீரை – 1 பிடி | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 20 | 40 | 40 |
| தேங்காய் [illegible] | 30-50 | 40-50 | 40 |
| இராசவள்ளி | 70 | 100 | 70 |

# இராசி பலன்

24.02.2014
(மாசி 12, திங்கட்கிழமை )
சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு
தசமி பின்னிரவு 2.01 மணிவரை
மூலம் பின்னிரவு 4.08 மணிவரை
இராகுகாலம் 8.00-9.30 மணிவரை
சுபநேரம் 12.30-2.00 மணிவரை

**மேடம்** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்,சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பயணங்களால் நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**இடபம்** சுப விரயங்கள் ஏற்படும் நாள் , கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்ப பெரியவர்களின் ஆலோசனை கேட்டு நடப்பது நல்லது, தேகநலனில் கவனம் தேவை.

**மிதுனம்** விருந்தினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு செய்தொழில் மேன்மையுண்டு.

**கடகம்** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் அறிமுகம் கிடைக்கலாம், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், கௌரவமான நாள்.

**சிங்கம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், வியாபாரத்தை விருத்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** தூரத்து உறவினர்களால் நன்மையுண்டு, குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வரலாம், வாகன சுகமுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்,சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள்.

**துலாம்** இளைய சகோதரத்தின் வழியில் இனிய சம்பவங்கள் இடம்பெறலாம், பழைய பாக்கிகள் திடீரென வசூலாகலாம், பாராட்டும் புகழும் கூடும் நாள், பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**விருச்சிகம்** வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், பயணங்கள் தித்திக்க வைக்கும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு** சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்போடு செயற்படுவீர்கள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம்.

**மகரம்** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** குடும்ப மகிழ்ச்சி கூடும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், சமயோசித புத்தியால் பலரையும் கவர்வீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மீனம்** செய்தொழில் மேன்மையுண்டு, மற்றவர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள்.

வள்ளுவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பலாலியில் இருந்து இந்தியாவுக்கு நேரடி விமான சேவை

### காங்கேசன்துறைமுகம், தலைமன்னார்- இராமேஸ்வரம் கப்பல் போக்குவரத்து

# வடக்கின் பொருளாதாரத்திற்கு உயிரூட்டும் தீர்மானங்கள்; தெற்கு எதிர்ப்பது ஏன்?

கடந்த வாரம் வடக்கு மாகாண சபையில் பல தீர்மானங்கள நிறைவேற்றப்பட்டிருந்தன.

அவற்றில் பலாலியில் இருந்து இந்தியாவுக்கு நேரடி விமான சேவைகள் நடத்தப்படவேண்டும், காங்கேசசன்துறை துறைமுகம் வர்த்தக துறைமுகமாக மாற்றப்பட வேண்டும் மற்றும் தலைமன்னார் இராமேஸ்வரம் இடையே கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

ஏகமனதாக நிறைவேற்றப்படிருந்த இந்தத் தீர்மானங்களின்படி பலாலியில் இருந்து இந்தியாவின் சென்னை நகரத்திற்கோ அல்லது வேறு இந்திய நகரங்களுக்கோ விமான சேவை ஆரம்பித்தல், காங்சேகசன துறை துறைமுகம் வர்த்தகப் பாவனைக்கு திறந்துவிடல் மற்றும் தலை மன்னாரில் இருந்து இராமேஸ்வரத்துக்கு கடல் போக்குவரத்தை ஆரம்பித்தல் என்பன வடக்கின் பொருளாதார அபிவிருத்திக்கு மிக அவசியமான கோரிக்கைகள்.

வடக்கின் பொருளாதார அபிவிருத்தியை விரும்பும் தரப்புகள் எவையும் இதை எதிர்க்க வேண்டிய தேவை கிடையாது.

ஆனால் உடனடியாகவே தென் பகுதியில் இருந்து இதற்கு எதிர்ப்புக் கிளம்பியது.

முதலில் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிரியங்க ஜயரத்ன இதை விமர்சித்தார்.

வட மாகாண சபையின் தீர்மானம் கேலிக்குரியது. ஏற்கெனவே நாட்டில் 2 சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. அவ்வாறு இருக்கையில் இன்னொரு சர்வதேச விமான நிலையம் அமைப்பது பொருத்தமற்றது எனச் சாடினார்.

அடுத்து அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல,


விமான நிலையங்கள் நிறுவுவதற்கான முழு அதிகாரமும் மத்திய அரசிடமேயுள்ளது. வட மாகாண சபைப் பிரேரணை தொடர்பில் நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை எனக் குறிப்பிட்டார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இதற்கு பதிலளிக்கும் வகையில் வட மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவுக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

வட மாகாண சபையின் மேற்குறித்த தீர்மானங்களின் விடயங்களை தெரிந்து கொள்ளாமல் கருத்துக்ளை தெரிவிப்பதானது நல்லிணக்க செயற்பாடுகளை பாதிக்கும் என்றும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச விமான நிலையம் என்ற வார்த்தை பயன்படுத்தப்படவில்லை எனவும் அத்துடன் தீர்மானம் இலங்கை-இந்திய அரசுகளைக் கோருவதென்றே நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, இந்திய அரசு மேற்படி கோரிக்கைகளுக்கு இணங்கியவாறு இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவரும் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் ஒவ்வொரு வருடமும் கலந்து கொண்டுவரும் இந்திய துணைத் தூதுவர் வி.மகாலிங்கம், பலாலியில் இருந்து இந்தியாவுக்கு நேரடி விமான சேவைகள் நடத்தும் வகையில் பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்து தருகிறோம், மற்றும் தலை மன்னார் இராமேஸ்வரம் இடை யே கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படலாம், காங்சேகசன் துறை துறைமுகத்தை ஆழமாக்கி வர்த்தக துறைமுகமாக மாற்ற உதவி எனப் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.




இதை வைத்து நோக்கும்போது இந்திய அரசு மேற்படி தீர்மானங்களுக்குசாதகமான நிலைப்பாட்டையே மேற்கொள்ளும் என எடுத்துக் கொள்ளலாம்.

எனவே இனி இலங்கை அரசாங்கமே பச்சைக் கொடி காட்ட வேண்டிய தேவையுள்ளது.

ஆனால்,இலங்கை மத்திய அரசு எதிர்ப்பதன் காரணம் புரியவில்லை.

பலாலியில் இருந்து இந்தியாவுக்கு நேரடி விமான சேவை, காங்சேகசன துறை துறைமுகம் வர்த்தகப் பாவனைக்குத் திறந்துவிடல் மற்றும் தலை மன்னார் இராமேஸ்வரம் இடையே கப்பல் போக்குவரத்து ஆரம்பித்தல் என்பன வடக்கின் பொருளாதாரத்திற்கு மிகப் பெரிய வாய்ப்பாக அமையும். இதைத்தான் வட மாகாண சபை தீர்மானமாகக் கொண்டுவந்து ஏகமனதாக நிறைவேற்றியது.

பலாலியில் இருந்து இந்தியாவுக்கு நேரடி விமான சேவை ஆரம்பிக்கின், வட பகுதி மக்களின் இந்தியாவுக்கான பயணம் இலகுவாக்கப்படுவதுடன் செலவும் பாதியாகக் குறையலாம்.

அத்துடன் இந்தியாவில் இருந்தும் பல இலட்சம் பேர் இங்கு வருகை தருவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும். இந்தியா ஊடாக வருகை தருபவர்களின எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

இது 2016ஆம் ஆண்டில் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை வரவழைத்தல் என்று இலக்கு நிர்ணயித்துவிட்டுக் காத்திருக்கும் இலங்கையின் சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கும் கைகொடுக்கும்.

காங்சேகசன்துறை துறைமுகத்தை வர்த்தகப் பாவனைக்குத் திறந்துவிட்டால் வடக்கின் வர்த்தர்கள் குறிப்பாக புடைவை உள்ளிட்ட இந்தியாவில் இருந்து பொருடகளை இறக்குமதி செய்யும் வர்த்தகர்கள் நன்மை அடைவர்.

இறக்குமதிச் செலவு பெருமளவு குறையும் இதனால் இந்தப் பிரதேச நுகர்வோர் ஓரளவு நியாய விலையில் குறித்த பொருட்களைப் பெறலாம்.

தலை மன்னார்-இராமேஸ்வரம் கப்பல் போக்குவரத்து நடந்தால் சில ஆயிரம் ரூபாயில் இந்தியா சென்று வர முடியும்,

பாதுகாப்பு விவகாரம் என்பதைத் தவிர்த்துப் பார்த்தால் பொருளாதார ரீதியாக பல பயனுள்ள வகையான நன்மைகள் ஏற்படும்.

வடக்கின் இந்தத் தீர்மானங்கள் வடக்கிற்கு மட்டுமல்ல முழு இலங்கைக்குமே மிகவும் அவசியமானவை.

இதை பாதுகாப்பு விவகாரம் என்ற குறுகிய வட்டத்திற்குள் மட்டும் மட்டுப்படுத்தி விடுவது அவ்வளவு நல்லதல்ல.

## டயலொக்கின் இலாபம் 5.2 பில்.

டயலொக் ஆக்சியாடா குழுமத்தின் 2013 நிதியாண்டின் நிகர இலாபம் 5.2 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளதாக நிறுவனம் அறிவித்துள்ளது. கடந்த நிதியாண்டில் நிறுவனம் மொத்தமாக 63.3 பில்லியன் ரூபா வருமானத்தை பதிவு செய்திருந்தது.

இதில் நிறுவனத்தின் டயலொக ஆக்சியாடா பிஎல்சி, டயலொக் புரோட்பான்ட் நெற்வேர்க்ஸ் லிமிடெட், டயலொக் ரெலிவிஷன் லிமிடெட் ஆகியன பங்களிப்பை செலுத்தியிருந்தன.

## சண்டிலிப்பாயில் முதலீட்டு கருத்தரங்கு

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ்.கிளையானது சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துடன் இணைந்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இளைஞர் மன்றங்களின் அங்கத்தவர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் கிராம உத்தியோகஸ்தர்கள் என சண்டிலிப்பாய் மற்றும் மானிப்பாய் வாழ் மக்களுக்கு முதலீட்டு வழிமுறைகள் மற்றும் வழிப்படுத்தல்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடலை நாளை மறுதினம் 26-ம் திகதி காலை 9.00 மணி முதல் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் இதில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் எனவும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ். கிளை முகாமையாளர் மு.திலீபன் அறிவித்துள்ளார்.




# கடந்த வாரம் பங்குச்சந்தை

கடந்த வாரம் தொடர்ச்சியான ஆறாவது நாளாக பங்குச்சந்தை சரிவுப் பெறுமதியை பதிவு செய்திருந்தது. இதில் சிலோன் டொபாக்கோ கம்பனியின் விலைச்சரிவு பங்களிப்பை வழங்கியிருந்தது. நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி மற்றும் டயலொக் ஆக்சியாடா ஆகியவற்றின் சந்திப்புகளின் காரணமாக மொத்தப்புரள்வு பெறுமதி உயர்வடைந்திருந்தது. மேலும் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பங்குகள் மீது அதிகளவு ஈடுபாடு காணப்பட்டதுடன் கொத்மலே ஹோல்டிங்ஸ் மற்றும் எக்ஸ்போலங்கா பங்குகள் மீதும் நாட்டம் காணப்பட்டது.

இதேவேளை, ஜோன் கீல்ஸ் பங்குகளின் விலைச் சரிவு பிர தான பங்களிப்பை ஏற்படுத்தியுள்ளதாக பங்கு முகவர்கள் குறிப்பிட்டிருந்தனர். கடந்த ஆறு வார காலத்தில், ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பங்கின் விலை 14 வீத சரிவை பதிவு செய்துள்ளதாகவும், இதன் காரணமாக பிரதான சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நடப்பு நிதியாண்டின் மூன்றாம் காலாண்டில், ஜோன் கீல்ஸ் ஹோலடிங்ஸ் இலாபத்தை பதிவு செய்திருந்த போதிலும், பங்குகளின் விலைச் சரிவு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வங்கி, நிதியியல் மற்றும் காப்புறுதி துறை மொத்தப்புரள்வு பெறுமதியில் அதிகளவு பங்களி ப்பை செலுத்தியிருந்தது (நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி, கொமர்ஷல் வங்கி மற்றும் சம்பத் வங்கி ஆகியவற்றின் பங்களிப்புடன்) துறையின் சுட்டெண் 0.73% சரிவை பதிவு செய்தி ருந்தது. நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பங்கொன்றின் விலை மாற்றமின்றி 66.00 ரூபாவாக பதிவாகியிருந்தது.

வெளிநாட்டு உரிமையாண்மை 147,851 பங்குகளால் குறைந்திருந்தது. கொமர்ஷல் வங்கி பங்கொன்றின் விலை 2.00 ரூபாவால் (1.69%) குறைவடைந்து 116.00 ரூபாவாக பதிவாகி யிருந்தது. சம்பத் வங்கி பங்கொன்றின் விலை மாற்றமின்றி 170.00 ரூபாவாக பதிவாகியிருந்தது.

தொலைத் தொடர்பாடல்துறை மொத்தப்புரள்வு பெறுமதியில் இரண்டாவதாக அதிகளவு பங்க ளிப்பை செலுத்தியிருந்தது (டயலொக் ஆக்சியாடா பங்களிப்புடன்) துறையின் சுட்டெண் 0.24% உயர்வை பதிவு செய்திருந்தது. டயலொக் ஆக்சியாடா பங்கொன்றின் விலை 0.10 ரூபாவால் (1.10%) உயர்வடைந்து 9.20 ரூபாவாக பதிவாகியிருந்தது.

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பங்குகளும் மொத்தப்புரள்வு பெறுமதியில் அதிகளவு பங்களிப்பை வழங்கியிருந்தது. பங்கொன்றின் விலை 1.00 ரூபா (0.47%) குறைவடைந்து 214.00 ரூபாவாக பதிவாகியிருந்தது. வெளிநாட்டு உரிமையாண்மை 129,273 பங்குகளால் அதிகரித்திருந்தது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.46 | 132.34 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 214.98 | 221.11 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 176.59 | 182.35 |
| சுவிஸ் பிராங் | 144.58 | 149.89 |
| கனேடிய டொலர் | 115.78 | 119.69 |
| அவுஸ்திரேலிய டொலர் | 115.44 | 119.80 |
| சிங்கப்பூர் டொலர் | 101.77 | 105.09 |
| ஜப்பான் யென் | 1.25 | 1.29 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.10 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.62 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலையாளிகள் விடயத்தில் தமிழக அரசு இரட்டை வேடம் போடுகின்றதா?

## மத்திய அமைச்சர் நாராயணசாமி கொதிப்பு



ராஜீவ் கொலையாளிகள் 3 பேர் தாக்கல் செய்த கருணை மனு மீது மத்திய அரசு முடிவு எடுக்காததால் அதை சுப்ரீம் கோர்ட்டு பரிசீலித்து அவர்களின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து உத்தரவிட்டுள்ளது. தனிப்பட்ட முறையில் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பில் எனக்கு உடன்பாடு இல்லை. கீழ்கோர்ட்டு, தனிகோர்ட்டு, சுப்ரீம்கோர்ட்டில் ராஜீவ் கொலை வழக்கில் இவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் என தீர்ப்பில் உறுதி செய்து மரண தண்டனை வழங்கப்பட்டது.

சுப்ரீம்கோர்ட்டு தீர்ப்பு முன்னுக்குப்பின் முரணாக உள்ளது. எந்த தீர்ப்பும் ஆதாரத்தை அடிப்படையாக கொண்டதாகத்தான் அமைய வேண்டும். கால தாமதத்தை காரணம்காட்டி தீர்ப்பை மாற்றுவதை அனுமதிக்க முடியாது என மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார். அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது கூறியதாவது,

தமிழக அரசு தூக்குதண்டனை கைதிகள் 3 பேரையும் விடுதலை செய்ய அமைச்சரவையில் முடிவெடுத்து சட்டமன்றத்தில் அறிவித்து உள்துறை அமைச்சகத்திற்கு அதிகாரத்துடன் ஒருகடிதத்தை அனுப்பியது. அதில் 3 நாட்களுக்குள் மத்திய அரசு பதில் தராவிட்டால் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என அதிகார தோரணையில் குறிப்பிட்டிருந்தனர். இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் மத்திய, மாநில அரசுகளுக்கான அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளது.

தூக்கு தண்டனை அளிக்கப்பட்ட 3 பேரையும் மத்திய உளவுத்துறை விசாரித்து தடா நீதிமன்றால் தண்டனை வழங்கப்பட்டவர்கள். அவர்களை விடுதலைசெய்ய மாநில அரக்கு அதிகாரமே கிடையாது. தமிழக அரசின் இந்த நடவடிக்கை வருத்தம் அளிக்கிறது.

மத்திய உள்துறை அமைச்சகம் தமிழக அரசு அனுப்பிய கடிதத்திற்கு 6 மணி நேரத்தில் பதில் அனுப்பியது. அதோடு மத்திய அரசு சுப்ரீம் கோர்ட்டையும் அணுகி ராஜீவ் கொலையாளிகள் 3 பேரின் தண்ட னையை குறைத்ததை மறுபரிசீலனை செய்யவும், விடுதலை செய்ய இடைக்கால தடையும் பெற்றுள்ளது.

ராஜீவ்காந்தி நாட்டின் பிரதமராக இருந்து தீவிரவாதத்திற்கு இரையானவர் என்பதை சுப்ரீம் கோர்ட்டு கருத்தில் கொண்டு இந்த தீர்ப்பை வழங்கவில்லை. தமிழகத்தை ஆளும் அ.தி.மு.க. விடுதலை புலிகளுக்கு எதிரானவர்கள் என்றுதான் தங்களை காட்டி வந்தது. விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடை செய்ய வேண்டும், அந்த இயக்கத்தை தீவிரவாத இயக்கமாக அறிவித்து அதன் தலைவர் பிரபாகரனை இந்தியாவிற்கு கொண்டுவந்து ராஜீவ் கொலை வழக்கில் மரண தண்டனை வழங்க வேண்டும் என்றும் அ.தி. மு.கவினர் ஏற்கனவே கூறி வந்துள்ளனர்.

ஆனால் கடந்த சில மாதத்திற்கு முன்பு ராஜீவ் கொலை கைதி நளினி பரோலில் விட தன்னை அனுமதிக்கும்படி தமிழக அரசிடம் அனுமதி கோரியிருந்தார். அவருக்கு பரோல் அளிக்கக்கூடாது என மத்திய அரசுக்கு தமிழக அரசு கடிதம் அனுப்பியது. அப்படியிருக்கும்போது தற்போது ஏன் திடீர் மாற்றம்? இந்த விடயத்தில் அ.தி.மு.க. இரட்டை வேடம் போடுகிறது.

தீவிரவாதிகளுடன் தொடர்புடைய 3 பேரை விடுவிப்பதில் ஏன் அவசரம் காட்ட வேண்டும்? இதற்கு அரசியல் காரணமா? தேர்தல் காரணமா? காங்கிரஸ் கட்சி தீவிரவாதத்தால் இந்திராகாந்தி, ராஜீவ் ஆகியோரை இழந்துள்ளது. நாங்கள் எங்கள் தலைவரை இழந்து தவிக்கிறோம். எங்களை பொறுத்தவரை தீவிரவாதத்தில் ஈடுபடுபவர்களுக்கு தூக்கு தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். சுப்ரீம்கோர்ட்டு இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும். தமிழக அரசும் தனது நிலையை மாற்றிக் கொள்ள வேணடும என அவர் கூறினார.

(மற்றொரு செய்தி 13 ஆம் பக்கம்) (அ-2)

### கர்சாயின் வருகை ஒத்திவைப்பு

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய் மூன்று நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று இலங்கைக்கு வருகைதரவிருந்தார்.

இந் நிலையில் பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் எல்லைக்கு அருகிலுள்ள குனார் மாகாணத்தில் தலிபான் போராளிகளின் தாக்குதலில் ஆப்கான் படையினர் 20 பேர் பலியானதையடுத்தே அவரது விஜயம் ஒத்திவைக்கப்பட்டதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் வகையிலேயே அவரது விஜயம் அமையும் என்றும் வெளிவிவகார அமைச்சு ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)

## பிரேரணை தொடர்பில் அஞ்சத் தேவையில்லை

### வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

ஜெனீவா பிரேரணை தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை இளையோர் பாராளுமன்றத்தின் ஆறாவது அமர்வு மஹரகம ஸ்ரீலங்கா யூத் மத்திய நிலையத்தில் நேற்று முற்பகல் ஆரம்பமானது.

ஒற்றுமை, அபிவிருத்தி, மனித உரிமைகள் மற்றும் அதனூடாக தற்போதைய இளையோருக்கு ஏற்பட்டுள்ள சவால்கள் மற்றும் வாய்ப்புக்கள் தொடர்பில் இம்முறை அமர்வின்போது கலந்தாலோசிக்கப்படுகிறது.

அங்கு உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர்,

தற்போது ஜெனீவா மாநாடு தொடர்பில் கவனம் செலுத்தினால் இந்த பிரேரணைகள் அனைத்தையும் எம்மால நிறுத்த முடியும்.

அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும். அவர்கள் கேட்பதை நாம் கொடுக்க வேண்டும்.

நாட்டுக்கு நன்மை கிடைக்குமா என்பது தொடர்பில் சிந்தித்தே அரசாங்கம் என்ற வகையில் நாம் தீர்மானங்களை மேற் கொள்ள வேண்டியுள்ளது. அதனை மீறும் வகையில் நாட்டுக்கு, மக்களுக்கு பாதகமான தீர்மானங்களை மேற் கொள்வதற்கு எமது அரசாங்கம் ஒரு போதும் இணக்கம் தெரிவிக்காது என்றார்.

(அ-2)




ஸ்கந்தவரோதயன் தமிழறிஞர் கலாநிதி அகளங்கன் அவர்களின் மணி விழா கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றபோது.


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

- பிறப்பு: 1980 இந்து
  நட்சத்திரம்: அத்தம் 4
  கி.பா: 22
  உயரம்: 5’6”
  தகைமை/தொழில்: பயிற்றப்பட்ட ஆசிரியர் / தற்போது தொழிலதிபர்
  தொ.இ: B/2846
- பிறப்பு: 1986 இந்து
  நட்சத்திரம்: சுவாதி 2
  கி.பா: 19.5
  உயரம்: 5’7”
  தகைமை/தொழில்:A/L/கணக்காளர் (UK)
  தொ.இ: B/2847
- பிறப்பு: 1985 இந்து
  நட்சத்திரம்: சுவாதி
  கி.பா: 69 சூரி, செவ் 1 இல்
  தகைமை/தொழில்: A/L /தாதியர்
  தொ.இ: B/2848
- பிறப்பு: 1980 இந்து
  நட்சத்திரம்: அனுசம்
  கி.பா: 36.5 செவ் 12 இல்
  உயரம்: 5’7”
  தகைமை/தொழில்:O/L/ ஆலய குருக்கள்
  எதிர்பார்ப்பு: சைவபோசனம்
  தொ.இ: B/2849

இவர்களுக்கு மணமகன் தேவை

- பிறப்பு: 1988 இந்து
  நட்சத்திரம்: பூரம் 1
  கி.பா: 60 செவ் 8 இல்
  உயரம்: 5’
  தகைமை/தொழில்: A/L
  தொ.இ: G/2865
- பிறப்பு: 1985 இந்து
  நட்சத்திரம்: விசாகம் 1
  கி.பா: 52
  உயரம்: 5’5”
  தகைமை/தொழில்: A/L /மருத்துவ மாது
  தொ.இ: G/2866
- பிறப்பு: 1987 இந்து
  நட்சத்திரம்: புனர்பூசம் 4
  கி.பா: 57 செவ் 1 இல்
  உயரம்: 5 2”
  தகைமை/தொழில்: சித்த ஆயுள்வேத பட்டதாரி (இறுதியாண்டு)
  தொ.இ: G/2868
- பிறப்பு: 1969 இந்து
  நட்சத்திரம்: ரோகினி 2
  கி.பா: 44 செவ் 7 இல்
  உயரம்: 5’3”
  தகைமை/தொழில்: A/L /தற்காலிக கணக்காளர்
  எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்
  தொ.இ: G/2870

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தின் சூட்டுப் பயிற்சி முகாம் அகற்றப்பட்டுள்ளது

(தும்பளை)

சாவகச்சேரி கடற்கரை ஓரத்தில் அமைக்கப்பட்டிருந்த இராணுவத்தினரின் சூட்டுப் பயிற்சி நிலையம் கடந்த வாரம் அகற்றப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் கிராமிய அபிவிருத்தி அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் நா.பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இச் சூட்டுப் பயிற்சி நிலையம் யுத்த காலப் பகுதியிலிருந்து இயங்கி வந்த நிலையில், இங்கு வைத்தே சூட்டுப் பயிற்சிகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வந்தனர்.


இதனால் கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் அச்சத்துடன் தொழிலில் ஈடுபட வேண்டிய நிலை காணப்பட்டது.

இவ்விடயத்தை சாவகச்சேரி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் யாழ். மாவட்ட கிராமிய அபிவிருத்தி அமைப்புக்களின் சம்மேளனத் தலைவரிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

இதன் பிரகாரம் சம்மேளனத் தலைவர் உரிய இராணுவ அதிகாரியுடன் மேற்கொண்ட கலந்துரையாடலையடுத்து குறித்த நிலையம் கடந்த வாரம் அகற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கடற்கரையில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் இனிவரும் காலங்களில் அச்சமின்றி தொழிலை முன்னெடுக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ-9-19)




நன்றி:-ஜலன்ட்

## இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரியின் ஜின்னா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் மௌலவி எம்.எஸ். ஏ.எம் முபாறக் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் இம்மானுவேல் ஆர்னோல்ட், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின், யாழ்.கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாநகர சபை பிரதி முதல்வர் எம்.றமீஸ், யாழ்.மாநகர சபை உறுப்பினர்களான எஸ்.சரபுல் அனாம், எம்.முஸ்தபா, ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் ஜனாப் லாபிர், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ்.பாயிஸ், யாழ்.,கிளி. முஸ்லிம் சம்மேளனத் தலைவர் எம். ஜமால் முஹிதீன், யாழ்.உதவும் கரங்கள் தலைவர் எம். இர்பான் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(அ-9)

# சிவராத்திரியை முன்னிட்டு சிவவாரம் பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரியை முன்னிட்டு சிவ நற்பணி மன்றங்களான சிவத்தமிழ் மானிட விடியற் கழகம், சிவதொண்டர் சிவமங்கையர் அமைப்புகள், சைவநெறிக்கூடம் ஆகியன இணைந்து கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமையிலிருந்து 27 ஆம் திகதி சிவராத்திரி வரையான ஒரு வார காலத்தை சிவவாரமாக பிரகடனப்படுத்த அனுஸ்டித்து வருகின்றன.

இந்தக் காலப்பகுதியில் பாடசாலைகளில் சிவதொண்டர், சிவமங்கையர் அமைப்புகளை உருவாக்குதல், தமிழ் வழிபாட்டுப் பிரசாரம், பிடியரிசித் திட்டம், மது, புகைத்தல் விலக்குப் பிரச்சாரம், சிரமதானப் பணிகள், அறநெறிப் பாடசாலைகள் உருவாக்கல், கூட்டுப பிரார்த்தனைகள் ஏற்பாடு செய்தல், சிவமங்கையரின் கைப்பணிப் பொருட்கள் உற்பத்தி போன்ற பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கபபடுகின்றன

இதன் முதற்கட்டமாக கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் ஏற்பாடு செய்த புகைத்தல் எதிர்ப்பு விழிப்புணர்வுப் பேரணிக்கு பூரண ஆதரவை வழங்கியதுடன் சிவதொண்டர்களும் சிவ மங்கையர்களும் அதில் கலந்துகொண்டனர்.

மேலும், எதிர்வரும் சிவராத்திரி தினத்தன்று, சிவதொண்டர்களால் சம்புநாதஈஸ்வரத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிவபெருமானின் 21 அடி திருச்சொரூபத்திற்கு முன்பாகப் பல்வேறு நிகழ்வுகள் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக, சிவத்தமிழ் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்வுகளும் முற்றுமுழுதாக தமிழ் வழிபாடுகளும் சம்புநாதஈஸ்வரத் தீர்த்தக் கரையில் அமைக்கப்பட்டுள்ள ஆதிமூல லிங்கநாதருக்கு அடியார்களின் கைகளினால் கடல் தீர்த்தத்தினால் அபிஷேகமும தமிழ்த் திருமுறை வழிபாடும் நடைபெறவுள்ளன.

கடந்த சில வருடங்களாக சிவத்தமிழ மானிட விடியற்கழகத்தால் சிவராத்திரியை ஒட்டிய காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட மேற்படி அறப்பணிச் செயற்பாடுகள் இம் முறை சிவநற்பணி மன்றங்களுடன் இணைந்து நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-9)




## போயா தினத்தில் சிகரெட் விற்பனைக்கு தடைவிதிப்பு

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி வர்த்தக சங்கத்திற்குட்பட்ட கடைகளிலும் உணவகங்களிலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பேயா தினங்களிலும் சிகரெட் விற்பனை செய்யக்கூடாது என சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

புகைத்தலை எதிர்க்கும் நோக்கில் இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நடைமுறையை நெல்லியடிப் பகுதிகளிலுள்ள கடைகளும் உணவகங்களும் கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் கடைப்பிடித்து வருகின்றனர்.

(அ-9)

# குப்பைகளால் நிறையும் வல்வெட்டி கடற்கரை

வல்வெட்டித்துறை நேதாஜி சனசமூக நிலையத்திற்குஅண்மித்த கடற்கரையோரங்களில் போடப்படும் குப்பைகள் அகற்றப்படுவதில்லையென கிராம மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

குறித்த கடற்கரையோரத்தில் அக்கிராம மக்களினால் கழிவுகள் போடப்படுகின்றன

இக்கழிவுகளையும் குப்பைகளையும் ஒரு வாரத்திற்கு ஒருமுறை வல்வெட்டித்துறை நகர சபையின் கழிவகற்றல் பிரிவினர் சுத்தமாக்கி விடுவது வழமை.

அயினும் தற்போது இச்செயற்பாடு இடம்பெறாமையினால் அப்பகுதியில் கழிவுகள் நிறைந்து சுகாதாரத்திற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் காணப்படுகின்றது.

அத்தோடு கடற்கரையோரங்களில் செல்ல முடியாதளவிற்கு துர்நாற்றம் வீசுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் வல்வெட்டித்துறை நகர சபையின்கழிவகற்றல் பிரிவினர் உடன் நடவடிக்கை எடுக்குமாறும் அல்லது நகர சபையினர் கழிவகற்றும் உழவியந்திரத்தை தம்மிடம் தந்தால் தாம் அவற்றை அகற்றி கிராமத்தை சுத்தம் செய்வதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

(அ-9-28)

# பார்த்தீனிய செடியின் பரம்பல் அதிகரிப்பு

(கரணவாய்)



வடமராட்சி நாவலர் மடத்திலிருந்து கரவெட்டி பிரதேச செயலகம் வரையான பகுதிகளில் பார்த்தீனியச்செடியின் பரம்பல் காணப்படுவதாக மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்

வீதியின் இருமருங்கிலும் பரவலாக இச் செடி வளர்ந்து வருவதனால் பல இடங்களுக்கு பரவக்கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது

இவ்வாறாக ஏனைய இடங்களிற்கு பரவும் பட்சத்தில் விவசாய செய்கைகளுக்குள் ஊடுருவலாமென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்

தற்போது வடக்கு மாகாண விவசாய அமைச்சினால் இந் நச்சு களைகள் துரிதகதியில் அழிக்கப்பட்டு வரும் இவ்வேளையில் குறித்த இடத்திலுள்ள களையை அகற்ற உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-9-60)

# கப்பூதா பகுதியில் வைக்கோல் திருட்டு

கப்பூதா கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வயல் வெளிகளில் வைக்கப்பட்டுள்ள வைக்கோல்கள் திருடப்பட்டு வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது கமக்காரர்களினால் அறுவடை செய்யப்பட்ட நெற்கலின் வைக்கோல்கள் குவியலாக நெற்காணிகளில் வைக்கப்பட்டுள்ளன.

இவற்றை இரவில் வாகனங்களை கொண்டு வந்து திருடிச் செல்வதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, அப்பகுதி பொலிஸார் இவ்விடயத்தில் கவனமெடுத்து திருடர்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-9-60)









யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் விவேகானந்தா விழா பாடசாலை அதிபர் திருமதி சண்முகரட்ணம் வேணுகா தலைமையில் நடைபெற்றபோது... (படங்கள்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரான்ஸ் நாட்டிற்கு பாலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாஸ் அண்மையில் விஜயமொன்றை மேற் கொண்டார். இதன் போது அந் நாட்டு ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹோலாண்டே அவரை பாரீஸ் ஜனாதிபதி மாளிகையில் வைத்து கைலாகு கொடுத்து வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# ஜெயலலிதாவின் முடிபிற்கு தமிழர்கள் துணை நிற்பர்

## இயக்குனர் பாரதிராஜா தெரிவிப்பு

ராஜீவ் காந்தி கொலைக்கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு ஒட்டு மொத்த தமிழர்களும் உறுதுணையாக நிற்பார்கள்' என்று இயக்குநர் பாரதிராஜா கூறியுள்ளார்.

ஜெயலலிதாவின் விடுதலை நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்து தமிழ் திரையுலகம் சார்பில், சென்னை வடபழனியில் உள்ள ஆர்.கே.வி. ஸ்ரூடியோவில் இயக்குநர் பாரதிராஜா தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய 3 பேருக்கும் தூக்குத்தண்டனையை சுப்ரீம் நீதிமன்றம் இரத்து செயதது. மேலும் நீதிமன்றத் தீர்ப்பு அடிப்படையில் அவர்கள் 3 பேர் மட்டுமின்றி இந்த வழக்கில் ஏற்கனவே ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் நளினி உட்பட மேலும் 4 பேரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று த்மிழக முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்து இருந்தார்.

இதற்காக உலக தமிழர்கள் அத்தனைபேரும், கண்ணீரால் முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு நன்றி தெரிவிக்க வேண்டும். மறப்பதும், மன்னிப்பதும் மனித மாண்பு. முதல் முறையாக தமிழன் தலை நிமிர்ந்து நிற்பதற்கான ஒரு முடிபை முதலமைச்சர் ஜெயலலிதா எடுத்திருக்கிறார். இதற்காக ஒட்டு மொத்த தமிழர்களும் அவருக்கு உறுதுணையாக நிற்பார்கள் என்றார். (2)

# போராட்டக்காரர்கள் வசமானது கீவ்; உக்ரைன் ஜனா. யானுகோவிச் தப்பியோட்டம்



**உக்ரைனில் தலைநகர் கீவை போராட்டக்காரர்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததால், ஜனாதிபதி விக்டர் யானு கோவிச் நேற்று முன்தினம் தப்பி ஓடிவிட்டார். அவர், தனது சொந்த ஊரான உக்ரைனின் கிழக்குப்பகுதிக்கு சென்றிருக்கலாம் என்று போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.**



இதற்கிடையே, முக்கிய அரசு அலுவலகங்கள் மற்றும் நாடாளுமன்றத்தை எதிர்க்கட்சியினர் கைப்பற்றியதைத் தொடர்ந்து, அரசால் கைது செய்யப்பட்டிருந்த முக்கிய தலைவர் யுலியா தைமமோஸ்ஷென்கோ விடுதலை செய்யப்பட்டார்.

தலைநகர் கீவ்வில் உள்ள சுதந்திர சதுக்கத்தை கைப்பற்ற இலட்சக்கணக்கான மக்கள் திரண்டு சென்றனர். அவர்களை தடுக்க முயன்ற பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் கடுமையான மோதல் ஏற்பட்டது.

இதனால் நகரில் உள்ள பல கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இந்த தாக்குதலில் இரு தரப்பிலும் நூற்றுக்கும் அதிகமானோர் பலியாகினர். ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்தனர். ஆர்ப்பாட்டக்காரர்களை ஒடுக்க உக்ரைன் அரசு கையாளும் விதம் குறித்து உலக நாடுகள் கவலையும், கண்டனமும் தெரிவித்தன. இதே நிலை நீடித்தால் உக்ரைனுடனான நல்லுறவை அமெரிக்கா துண்டித்துக் கொள்ள நேரிடும் என ஒபாமா எச்சரித்திருந்தார்.

உக்ரைன் மீது பொருளாதார தடை விதிப்பது தொடர்பாக ஆலோசித்து வருவதாக ஐரோப்பிய யூனியன் நாடுகளும் அறிவித்தன. இதனையடுத்து, போராட்டக்காரர்களுடன் சமாதானமாக போக விரும்புவதாக கூறிய ஜனாதிபதி விக்டர் யனுகோவிச் எதிர்க் கட்சி தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒரு குழுவை அமைத்தார்.

அந்த குழுவின் ஆலோசனையின் படி, பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்த விக்டர் யனுகோவிச்சை ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்குவதாக பாராளுமன்றம் அறிவித்தது. எதிர்வரும் மே மாதம் 25 ஆம் திகதி புதிய ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.


இந்நிலையில், ஜனாதிபதி வசிக்கும் மாளிகை உட்பட தலைநகர் கீவ் தங்களின் முழு கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளதாகவும், அதிபர் விக்டர் யனுகோவிச் கீவ் நகரை விட்டு வெளியேறிவிட்டதாகவும் போராட்டக்காரர்கள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

ஜனாதிபதி விக்டர் யானுகோவிச், தலைநகரை விட்டு வெளியேறிவிட்டதாக எதிர்க்கட்சி தலைவர் விட்டாலி கிளிட்ஸ்கோ பாராளுமன்றத்தில் அறிவித்தார். இதனை மறுக்கும் விதமாக, தொலைக்காட்சியில் தோன்றி பேட்டியளித்த விக்டர் யனுகோவிச், 'நான் ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்துவிடவில்லை.

சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உக்ரைன் நாட்டின் ஜனாதிபதியாகவே தற்போதும் பதவியில் நீடிக்கிறேன். என் தாய்நாட்டை விட்டு எங்கேயும் ஓடிப்போகும் எண்ணம் எனக்கு கிடையாது' என்று தெரிவித்தார். (2)

# அருணாசலப் பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் முயற்சியை சீனப்படைகள் நிறுத்த வேண்டும்

## நரேந்திரமோடி எச்சரிக்கை



அருணாசலப் பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் முயற்சியை சீனா நிறுத்திக்கொள்ள வேண்டும். இல்லையெனில் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று பா.ஜ.க. பிரதமர் பதவி வேட்பாளர் நரேந்திர மோடி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அருணாசலப் பிரதேச மாநிலம், பாஸிகட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மோடி கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இந்தியாவில் இருந்து அருணாசலப் பிரதேச மாநிலத்தை எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது என்றும் அவர் உறுதிபட தெரிவித்தார்.

நாடுமுழுவதும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள நரேந்திர மோடி முதன்முறையாக இப்போது வெளிநாட்டு விவகாரத்தை கையிலெடுத்துள்ளார். சீனா தனது அத்துமீறல் நடவடிக்கையை கைவிட்டு இந்தியாவுடன் உறவை பலப்படுத்திக் கொண்டு அமைதியையும், வளர்ச்சியையும் ஏற்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

அருணாசலப் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாகும். அதைப் பிரிப்பதற்கு எந்த சக்தியாலும் முடியாது. இந்த மாநில மக்களுக்கு சீனாவிடம் இருந்து அச்சுறுத்தலோ அல்லது பாதிப்போ ஏற்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

நாங்கள் யாருக்கும் அடிபணிய மாட்டோம். எதையும் விட்டுத்தர மாட்டோம் என்று இந்த மண்ணின் சார்பாக சத்தியம் செய்கிறேன்.

அருணாசலப் பிரதேசத்தின் எல்லைப் பகுதியை ஆக்கிரமிக்கும் முயற்சியை சீனப் படைகள் நிறுத்த வேண்டும். இந்தியாவுடன் நல்லுறவைப் பேணுவதில் கவனம் செலுத்த வேண்டும். சீனாவின் ஆக்கிரமிப்பு முயற்சியை உலக நாடுகள் ஒருபோதும் ஆதரிக்காது. எனவே சீனா, தனது எண்ணத்தை கைவிட்டு நாட்டின் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும் என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

729

அன்னாவரம் மற்ற சீர்களை அழைத்து தான் புரிந்துகொண்ட விடயங்களை அவர்களுக்கு விளக்கினான்.

## புரிந்து கொள்ளாத மக்கள்



ஆனால், அவர்கள் அவனுடைய அறிவுத் திறமையை தாழ்வாக மதிப்பிட்டு எள்ளி நகையாடினர். கோபங்கொண்ட, குணவர்மன், "உங்களுக்கும் என் கிரா்மத்து மக்களுக்கும் அதிக வேறுபாடு இல்லை. அவர்கள் படிக்காத முட்டாள்கள்! நீங்கள் படித்த முட்டாள்கள்!" என்று சினந்தான்.

அரண்மனையிலிருந்து திருமபிய புஜங்கர், வந்ததும் உடனே குணவர்மனை கிரந்தங்களின் விளக்கம் கேட்டார். குணவர்மன் கூறிய விளக்கங்களைக் கேட்டு அவர் வியந்து போனார். "மகனே! உன்னைப் போல் ஒரு புத்திசாலி எனக்கு சீடனாகக் கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண் டும்!" என்று மனமாரப் புகழ்ந்தார். அதன்பின் அவர் அரண்மனை யில் நடந்ததை விவரிக்கத் தொட ங்கினார்.

மன்னரின் தாயின் நோயை குணமாக்க எந்த வைத்தியராலும் முடியவில்லை. அப்போது, அவருடைய சபையில் இருந்த கவிஞர்களில் ஒருவர் தான் பத்திரப்படுத்தி வைத்திருந்த யாரோ ஒருவர் எழுதிய காவியத்தை மன்னரிடம் படித்துக் காட்டினார். காவியத்தில் வரும் நாயகிக்கு ஏற்பட்ட விசித்திர நோயின் வர்ணனைகள் மன்னரின் தாய்க்கு ஏற்பட்டிருந்த நோயை அப்படியே ஒத்திருந்தது.

அதைப் படித்துக்காட்டிய கவிஞர், "மன்னா! இதில் மூலிகைகளைப் பற்றிய விவரங்களும் சிகிச்சை முறை பற்றியும் எழுதியுள்ள கவிதைகளின் பொருள் எனக்கு விளங்கவில்லை. இதைப் படித்து யாரேனும் அதன் பொருளை உணர்ந்துகொண்டால், அதே மருந்துகளையும், சிகிச்சையும் அளித்துத் தங்கள் தாயை குணமாக்கி விடலாம்!" என்றார்.

அதற்காகத்தான், புஜங்கர் அரண்மனைக்கு அழைக்கப் பட்டிருந்தார். ஆனால், அவராலும் அதன் பொருளை உணர்ந்துகொள்ள முடியவில்லை.

"மகனே! எனக்கே விளங்காத கவிதைகளின் பொருள் உனக்கு ஒருவேளை விளங்கக்கூடும்! நீ படித்துப் பார்!" என்றார். அவற்றை வாங்கிப் படித்ததும், உடனே குணவர்மனுக்குப் பொருள் விளங்கிவிட்டது.

"குருவே! இதில் மூலிகைகளின் பெயர்கள் இரு பொருள்பட கூறப்பட்டுள்ளன. அவற்றை முறையே எடுத்து கசாயம் செய்து இதில் குறிப்படப்பட்டு உள்ளபடி மன்னரின் தாய ஆடல் பாடலை ரசித்தபடி அருந்தினால் அவர் குணமடைந்துவிடுவார். என்றான். "ஆனால், இந்த மூலிகைகளை எப்படித் தேடுவது? நான் இவற்றைப் பற்றி கேள்விப்பட்டதே இல்லையே!" என்றார் புஜங்கர்.

"அது பற்றிக் கவலையில்லை! இந்த மூலிகைகள் அனைத்தும் என் கிராமத்தில் பயிரிடப்படுகின்றன!" என்று குணவர்மன் கூற, புஜங்கர் மகிழ்ச்சியுடன் அவனை அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். குணவர்மனை சந்தித்த மன்னர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்.

உடனே, மன்னருடைய ஆட்கள் குணவர்மனுடன் சென்று அன்னாவரத்திலிருந்து மூலிகைகள் கொண்டுவர, வைத்தியர்கள் மருந்து தயாரித்துத் தந்தவுடன், மன்னரின் தாய் குணமானாள்.


மிகுந்த மகிழ்ச்சியுற்ற மன்னர் குணவர்மனுக்குப் பொன்னும் பொருளும் வெகுமதி அளித்தார். அதன்பின் அவன் புஜங்கரின் குருகுலத்தில் சேர்ந்து, இரண்டு வருடங்களாகப் பல வேதாந்தங்களையும், சாஸ்திரங்களையும் கற்றறிந்தான்.

இறுதியில், அவனை ஒரு முழு மேதாவியாக்கிய பெருமையுடன், புஜங்கர் அவனை ஆசீர்வதித்து அனுப்பினார்.

பேரறிஞனாகிவிட்ட குணவர்மன் தன் ஊரை சென்றடைந்தான். தான் கற்றறிந்தவற்றை தன் கிராமத்தினரிடம் எடுத்துரைத்தபோது, கிராமத்தினர் யாருக்கும் ஆர்வம் இல்லை.

ஆனால் குணவர்மன் மனமுடையவில்லை. தானே ஒரு குருகுலம் தொடங்கி கிராமத்துக் குழந்தைகளுக்கு தான் கற்றதையெல்லாம் சொல்லிக் கொடுக்க முடிபு செய்தான்.

(முற்றும்)



02.2014
24

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1387 - நேப்பில்ஸ் மற்றும் ஹங்கேரி மன்னன் மூன்றாம் சார்ல்ஸ் கொல்லப்பட்டான்.
- 1739 - இந்தியாவின் மொகலாய மன்னன் முகமது ஷாவின் படையை ஈரான் மன்னன் நாதிர் ஷாவின படை முறியடித்தது.
- 1826 - பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்கும் பர்மா மன்னன் ஆவாவுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டினை அடுத்து முதலாம் பர்மியப் போர் முடிவுக்கு வந்தது.
- 1881 - சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1918 - எஸ்தோனியா விடுதலையை அறிவித்தது.
- 1920 - நாசிக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது.
- 1942 - வொயிஸ் ஒஃப் அமெரிக்கா ஒலிபரப்புச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1969 - மரைனர் 6 விண்கலம் செவ்வாய் கோளுக்கு ஏவப்பட்டது.

### பிறப்புகள்

- 1304 - இபின் பட்டூட்டா, பயணி
- 1886 - ஆர். முத்தையா, தமிழ் தட்டச்சுப் பொறியை உருவாக்கியவர்
- 1948 - ஜெ. ஜெயலலிதா, தமிழ்நாட்டு முதலமைச்சர்
- 1955 - ஸ்டீவ் ஜொப்ஸ், ஆப்பிள் கம்பியூட்டர் நிறுவனத்தை தொடங்கியவர்களுள் ஒருவர்

### இறப்புகள்

- 1925 - ஹீஜால்மார் பிராண்டிங், நோபல் பரிசு பெற்ற சுவீடன் பிரதமர் (பி. 1860)
- 1986 - ருக்மிணி தேவி அருண்டேல், நடனக் கலைஞர், கலாக்ஷேத்திரா நடனப் பள்ளியினை நிறுவியவர். (பி. 1904)

### ருக்மிணி தேவி அருண்டேல்



ருக்மிணி தேவி அருண்டேல் பெப்ரவரி 29, 1904 ஆம் ஆண்டு மதுரையில் பிறந்தார். இவர் ஒரு புகழ்பெற்ற நடனக் கலைஞர். கலா சேத்திரா என்ற நடனப் பள்ளியினை நிறுவியவர். சமூகத்தில் ஒரு சாரார் மட்டும் பயின்ற சதிர் என்ற நடனத்திறகு, பரதநாட்டியம் என்று பெயரிட்டு பலரும பரவலாக பயில முனைப்புடன் செயற பட்டவர். பத்ம பூஷண விருது, காளி தாஸ் சம்மான் விருது, சங்கீத நாடக அகாதெமி விருது போன்ற பல விருதுகளைப் பெற்றவர்.

தியசோஃபிக்கல் சொஸைட்டியில் நடைபெறும் ஆண்டுவிழாக்களில். பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. ருக்மிணி, ரவீந்திரநாத் தாகூர் எழுதிய மாலினி என்ற நாடகத்தில் நடித்தார். மேலும் ஒரு பாடலும் பாடினார். இதைப் பார்த்த அவர் தந்தை இசை பயில ஊக்கப்படுத்தினார். ருக்மணி, கிரேக்க நடனமும் கற்றுக் கொண்டார்.

1920 ஆம் ஆண்டு ருக்மிணி தேவி தனது பதினாறாம் வயதில் ஜார்ஜ் சிட்னி அருண்டேலினை திருமணம் செய்துகொண்டார்.

1986 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம்திகதி, ருக்மிணி இறந்தார். அதன்பிறகு, அவர் துவக்கிவைத்த கலாஷேத்திரா தேசிய சிறப்பு வாய்ந்த நிறுவனமாக பாராளுமன்றத்தினால் அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...சிவபெருமானது தரிசனம் கண்ட ஆனந்த சுந்தரம் உள்ளம் உருகி சர்ஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினார். அப்பொழுது சிவபெருமான் அவரிடம் அப்பா, நீ எதற்காக இந்த அரிய தவத்தினைப் புரிந்தாய்? எனக் கேட்க; ஆனந்தசுந்தரமும் தனக்கும் தன் மனைவிக்கும் நடந்த வாக்குவாதங்களைக் கூறினார்.

சிவபெருமானும் புன்னகையுடன் ஆண்டாளிடம் சென்று நீ எதற்காக இந்தத் தவத்தினைச் செய்கிறாய் என்று கேட்க, ஆண்டாளும் தனக்கும் தன் கணவனுக்கும் நடந்த உரையாடல்களைக் கூறி, நான் உம்மை நோக்கித் தவம் செய்யவில்லை. பரமபதியாகிய ஸ்ரீமன் நாராயணனை நினைத்தே தவம் செய்கிறேன். அவரே வந்து என் சந்தேகங்களைத் தெளிவிப்பார் என்றாள்.

அப்படியா! என்று புன்னகையுடன் கேட்ட சிவபெருமானும் திரும்பிச் செல்வது போல் போக்கு காட்டி தானே சங்கு சக்கரத்துடன் நாராயணனாக அவர்களுக்கு காட்சி தந்தார்.

தான் வணங்கி நின்ற நாராயணனே தன் முன்னே காட்சியளித்ததைக் கண்ட ஆண்டாள் அகமகிழ்ந்து கைகூப்பித் திவ்விய பாசுரங்களால் அவரைப் பாடித் துதித்தாள்.

ஆண்டாளே! நீ என்னை வேண்டிச் செய்த பூசனைக்கு மகிழ்ந்தோம். உன் தேவை என்ன? என்று திருவாய் மலர்ந்தார்.

ஆண்டாளும் உம்மைக் காணப் பெற்ற எனக்கு வேறு என்ன வேண்டும்? இதுவரையில் நான் ஆராய்ந்த நூல்களெல்லாம் நாராயணனாகிய உம்மைப் பரம்பொருள் என்று கூறுதலை அறிந்து அவ்வாறு நம்பி வணங்கி வந்தேன். ஆனால் என் கணவரோ, உன்னை மறந்து வேறோருவரைப் பரம்பொருள் என்று கருதி வணங்குகின்றார்.

உடலும் உயிரும் போன்ற வாழ்க்கையுடைய நாங்கள் வேறு வேறு பரம்பொருட்களைக் கொள்வது நியாயமல்ல என்று தர்க்கமாடினோம். இருவர் கருத்துக்கும் நூல்களில் ஆதாரங்கள் இருப்பதால் ஒருவரை ஒருவர் வெல்ல முடியவில்லை. ஆகவே இருவரும் ஒற்றுமையாகத் தவம் செய்தேனும் பரம்பொருளைத் தெரிந்து கொள்ளத் துணிந்தோம்.



கோரக்கர் குகை

இந்தத் தவத்தின் முடிவிலே கூட பரம்பொருள் ஒன்றே இல்லாமல் அவருக்குச் சிவனும், எனக்கு நீங்களுமாக வருதலையே நாங்கள் காணப் பெற்றோம். உண்மையில் பரம்பொருள் என்பது யார்? உண்மையைத் தெளிவாக விளக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டாள்.

அதனைக் கேட்ட ஸ்ரீமன் நாராயண

## ஆன்மீகம் 43

மூர்த்தியும், இறை பக்தியில் எந்நேரமும் திளைக்கும் தம்பதியரே, உங்கள் இருவரது அன்புக்குக் கட்டுப்பட்டே இருவருக்கும் தனித்தனியே நீங்கள் விரும்பியவாறே தரிசனம் தந்தோம். பரம்பொருள் யார் என்ற உங்கள் இருவரது சந்தேகங்களைப் போக்கவே யாம் வந்துள்ளோம். அதை நீங்கள் மட்டுமல்ல, இந்த உலகமும் தெரிந்து கொள்ளும் பொருட்டு இப்பொழுது காட்சி தருகிறோம் என்று கூறி, சிவனின் கூறாகிய சங்கரனாகவும், திருமாலின் கூறாகிய நாராயணனாகவும் இணைந்த சங்கர நாராயணனாகக் காட்சி தந்தார்.

ஆஹா! என்ன அற்புதமான காட்சி! மின்னல் வந்து நின்றது போல் ஒரு பேரொளி. அதன் பிரகாசத்தில் உலகம் முழுவதுமே ஒரே ஒளி வெள்ளமாய்க் காட்சியளித்தது. பரம்பொருளின் பேதா அபேதங்கள் மறைந்து சைவமும் வைணவமும் இணைந்து சங்கர நாராயணனாகக் காட்சியளித்த அந்த வடிவத்தைக் ஆனந்த சுந்தரனும், ஆண்டாளும் பிரமிப்புடன் பார்த்தனர். (தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



55

....அவரின் முதல் சொல்-சட்டம் மக்களின் வேண்டுகோளாக இருக்க வேண்டும். அவர்களது வெறுப்புக்குட்பட்டு இருக்கலாகாது என்பதே.


ரூல் என்பதற்குக் கோடு என்றும், ஆட்சி என்றும் பொருள். கோடு முடியளவு பிசகினாலும் முடிபு கோணலாகவே இருக்கும். அப்படியே ஆட்சி என்று இருந்ததைக் குறித்து வைத்துக் கொண்டார்.

ரூஸோ எழுதிய அரசியல் சட்டத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு பெரியவரிடம் (எம்.ஜி.சக்கரபாணி) இருந்தது. அதன்முதல் வாக்கியத்தை படித்ததுமே தனக்குள் சிரித்துக் கொண்டார் செம்மல். அதிலிருந்தது- ஆட்சிக்கு நல்லவர்கள் வருவதில்லை. வந்தாலும் நல்லவர்களாக இருக்க முடிவதில்லை என்பதே. வோட் என்பதற்கு மக்கள் நமக்களிக்கும் சம்மதம் மட்டுமில்லை: நாம் அவர்களுக்கு அளிக்கும் சத்தியமும் அடங்கியுள்ளது. நீங்கள் சொல்லும் சத்தியத்துக்கு நீங்கள்தான் மதிப்பு அளிக்க வேண்டும் என்பதை உன்னிப்பாகப் படித்தார்.

பெரியவர் ஆங்கில ஞானமுள்ளவர். அவர் தன் நண்பர் சிவானந்தத்துடன் பேசும்போது சொன்னார்: ராமச்சந்திரன் நாடோடி மன்னன், மன்னாதி மன்னன், நான் ராஜா என்று சொல்லிக் கொண்டு வரவில்லை. நீதான் எங்க ராஜான்னு மக்கள் சொல்லி அவன் வரப்போறான். அவனுக்குச் சில புத்தி மதிகளை மூத்தவன்கிற முறையிலே நான் சொல்லப்போறேன்.

சாதாரணமா ஒண்ணு அப்ப சொல்லுவாங்க. இங்கிலீஷ்காரன் நீதி அழகு -பிரஞ்சுக்காரன் வீதி அழகுன்னு.

ஆங்கிலேயன் நம்மை அடிமைப் படுத்தினாலும் நல்லா ஆண்டான். அதுக்கு ஒரு உதாரணம்- எந்த அதிகாரியும் அவர் கலெக்டரோ, கவர்னரோ யாராக இருந்தாலும் பொது மக்களுக்குக் கடிதம் எழுதும்போது உங்கள் அடி பணிந்த சேவகன் என்றுதான் கையெழுத்துப் போடுவார். நமக்கு சுதந்திரம் வந்ததும் இது அவமானம்னு எடுத்துட்டாங்க. அதிகாரிங்க அதிகாரியாகவே இருந்துட்டாங்க. மக்கள் சேவகனா மாறலே. இதை ராமச்சந்திரனைக் கடைப்பிடிக்கச்சொல்லப்போறேன். மத்ததை நம்ம ஆட்சி எப்படி இருக்கும்னு நாடோடி மன்னன்லே சொல்லியாச்சு என்றார்.



[illegible] எம்.ஜி.ஆர்.

அந்தப் பொன்னாளைப் பார்க்க பகலவன் பொன் மயமாகவே உதித்தான். வழக்கம்போல் வெளியே வந்தார் செம்மல். அவர் வெளியே வந்ததுமே, வாழ்க என்ற மக்கள் குரல் வானை எட்டியது. தாயை வணங்கி காரில் புறப்பட்டார். சென்னை நகரத்து மக்கள் மட்டுமல்ல, தமிழகத்தில் நாலு திசையிலிருந்தும் வந்து குழுமிய கூட்டம் வழியெங்கும் நின்று வாழ்த்தியது. கோட்டையை பிடித்தாலும், பாட்டை வாழ் மக்கள் பார்க்க வேண்டும்என்று அண்ணா சாலையிலுள்ள ராஜாஜி ஹால் நோக்கிப் போனார்- ஆணை இடவும், அதை நடத்திக் காட்டவும்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணைக்குழு அமைக்கப்படுமானால் த.தே.கூவின் ஆலோசனை பெறவேண்டும்

## சுரேஷ் எம்.பி.தெரிவிப்பு



ஐக்கிய நாடுகள் சபையின் மனித வுரிமை பேரவையின் தீர்மானத் துக்கு அமைவாக சர்வதேச விசார ணையொன்று கொண்டு வரப்படு மானால் அப்பொறி முறையினூ டான விசாரணை சிறப்புடையதாக அமையும் என யாழ். மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச சந்திரன் கூறியுள்ளார்.

அவரிடம் ஜெனீவா மாநாடு பற்றி கேட்டபோதே அவர் மேற்கண்ட வாறு கூறினார். அவர் தொடர் ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் இன்னு மொரு பொறிமுறை பற்றியும் கூறப்படு கிறது.

ஆனால் மனித உரிமை பேரவை யின் தீர்மானத்திற்கு அமைய விசா ரணை மேற்கொள்ளப்படுமா னால் அதுவே கனதியாக இருக்க முடியும் என தெரிவித்துள்ளார்.

ஜெனீவா மனித உரிமைப்பேரவை யினால் ஒரு விசாரணைக் குழு அமைக்கப்படும் போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஆலோ சனை பெறப்பட வேண்டுமென நாம் விரும்புகின்றோம். அவ்வாறு பெறப் படுமானால் தமிழ் மக்கள் எதிர்பார்க் கும் அபிலாஷைகளை நிறைவேற்ற கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்.

இலங்கைத்கெதிரான சர்வதேச விசாரணையென்ற விவகாரத்துக் குள் பல்வேறு விடயங்கள் உள் ளடக்கப்பட்டிருக்கின்றன.

அவை என்னென்ன என்பது பற்றி நாம் ஒரு தெளிவான முடிவை எடுக்க வேண்டும். சர்வதேச விசா ரணையென்பதற்கு மேலாக இன்று வட கிழக்கில் நிலவும் காணிப் பிரச்சினைகள் அத்துடன் சர்வதேச மத்தியஸ்தத்தினூடாக அரசியல் தீர்வு என்ற பல்வேறு விடயங்கள் இருக்கின்றன.

இவை அனைத்தும மேற்கொள் ளப்படவுள்ள விசாரணையில் உள் ளடக்கப்பட வேண்டியது முக்கிய மானதும் அவசியமானதுமாகும். இவ்விடயத்தை செய்து முடிப்பதற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்குத் தான் பெரிய பங்குண்டு. வேறு எவ ருமே இது பற்றிக் கதைக்க வாய்ப் பில்லை கதைக்கவும் மாட்டார்கள்.


எனவே தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பானது இவ்விடயம் சம்பந்த மாக ஒரு தெளிவான முடிவை எடுக்க வேண்டும்.

ஏனெனில் நடைபெறப் போகின்ற ஐ.நா மனித உரிமைப் பேரவை யினால் எப்படியான விசாரணைக் குழு நியமிக்கப்பட வேண்டும். அந்த குழு என்னென்ன விடயங் களை உள்ளடக்கி விசாரணை செய்ய வேண்டும் பேச வேண்டும் என்பதை தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பே தீர்மானிக்க முடியும்.

துரதிஷ்டவசமாக மிக நீண்ட காலத்துக்குப் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப பினர்கள் கொழும்பில் கடந்த வெள் ளிக்கிழமை இந்த விடயம் தொட ர்பில் கலந்துரையாடியது.

உண்மையில் இவ்விடயம் குறி த்து நாம் எப்பொழுதோ கூடி பேசித் தீர்மானித்திருக்க வேண்டும் என வும் கூறினார். (அ-2)

## உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களுடன் சந்திப்பு



யாழ்.மாவட்ட உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களை அச்சுவேலியில் உள்ள அவர்களது விவசாய இடத்திற்குச் சென்ற வடமாகாண சபை உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக பிரதி அமைச்சர் ஹேமல் குணசேகர ஆகியோர் நேரில் சந்தித்து கலந்துரை யாடினர். இதன் போது விவசாயிகள் தொடர்ந்தும் தம் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த உதவும் வண்ணம் கேட்டுக் கொண்டதுடன், தாம் உற்பத்தி செய்யும் வெங்காயத்தையும் கிலோ 60 ரூபா வீதம் கொள்வனவு செய்யும் படியும் கேட்டுள்ளனர். அமைச்சர் இது தொடர்பாக பரிசீலித்து வெகு விரைவில் பதிலளிக்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

## பாலங்களை நிர்மாணிக்க ஜப்பான் அரசு கடனுதவி

அதிவேக நெடுஞ்சாலைகளை கொழும்பு நகரத்துடன் இணைக் கும் பாலங்களை நிர்மாணிக்க ஜப் பான் 35 பில்லியன் யென்களை (343 மில்லியன் அமெரிக்க டொலர் கள்) கடனுதவியாக வழங்கவுள்ள தாக அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல தெரிவித்துள்ளார்.

களனி ஆற்றிற்கு குறுக்காக நிர்மாணிக்கப்படவுள்ள பாலம், தலை நகரத்திற்கு வடக்கே எதிர்வரும் 20 20 முதல் 2035 ஆம் ஆண்டு வரை யான காலப் பகுதியில் போக்குவ ரத்து தொகுதிகளை பூர்த்தி செய் யும் வகையில் வடிவமைக்கப்பட் டுள்ளது எனவும் அவர் கூறியுள் ளார். ஜப்பானின் சர்வதேச ஒத்து ழைப்புக்கான முகவர் அமைப்பி னால் 40 வருடத்திற்கான கடனுத வியாக இந்த நிதி வழங்கப்படவுள்ளது.

கடனுதவிக்கான வருடாந்த வட்டி யானது 0.1 வீதமாக இருக்கும் என் றும் இறுதி ஆண்டுகளில் இந்த வட்டி வீதம் 0.2 வீதமாக இருக்கு மென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிர்மாணிக்கப்படவுள்ள பாலங் களை கட்டுநாயக்க அதிவேக நெடு ஞ்சாலையை கொழும்பு நகருடன் இணைக்க உள்ளதுடன் வடக்கு மற் றும் தெற்கு பகுதிகளை இணைக்கும் வகையில் நிர்மாணிக்கப்படவுள் ளன. (அ-2)

## கைப்பொம்மை அரசாங்கம் ஒன்றை உருவாக்க அமெரிக்கா முயற்சிக்கிறது

இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கையில் தங்களின் இராச்சி யங்களை உருவாக்க முயற்சி செய வதாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ் வியில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், இந்து சமுத்திரத்தில் தங்களின் ஆதிக்கத்தை அதிகப்படுத்திக் கொள் வதற்கு எந்த ஒரு நாட்டுக்கும் இலங்கை மிகவும் முக்கியமான நாடாக இருக்கிறது.

எனவேதான் இலங்கையில் 2002ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரையில் இருந்த அமெரிக்காவின் கைப்பொம்மை அரசாங்கம் ஒன்றைப் போல மீண் டும் ஒரு அரசாங்கத்தை உருவாக்க அமெரிக்கா முயற்சிக்கிறது.

அதேநேரம் இந்தியாவும் அமெரிக காவுடன் இணைந்து வடக்கில் தங்களின் ஆதிக்கத்தை அதிகப் படுத்திக் கொள்ள முயற்சிக்கிறது.

1986 ஆம் ஆண்டு காலத்தில் இந்தியா விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களையும் நிதியையும் வழங்கி அவர்களை ஊக்குவித்தது.

ஆனால் அதுவே பின்னர் இந்திய பிரதமரின் உயிரை எடுக்கும் என்று இந்தியா எதிர்பார்த்திருக்கவில்லை.

அதேபோன்று தற்போது வட மாகாணத்துக்கு அதிக அதிகாரங் களை பெற்றுக் கொடுக்க இந்திய அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

ஆனால் இதனால் தமிழகத்தில் பிரிவினை வாதம் மேலோங்கிச் செல்கிறது.

இந்த விடயம் இந்தியாவுக்கு எதிர காலத்தில் ஆபத்தை ஏற்படுத்தும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## யுத்தத்தின் இறுதி நாட்கள் குறித்து விசாரணை நடத்தமுடியாது

### தூதுவர் ஜாலிய விக்ரம சூரிய தெரிவிப்பு



இலங்கை மீதான அழுத் தங்கள் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தக் கூடுமென அமெரிக் காவிற்கான இலங்கை தூதுவர் ஜாலிய விக்ரமசூரிய தெரிவித் துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வந்ததன் மூலம் ஈட்டப்பட்ட பல்வேறு விடயங்களில் பாதக நிலைமை ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

சில தரப்பினர் முன்கூட்டியே நீதி விசாரணை தீர்ப்புக்களை வழங்கி வருகின்றனர்.

நீதியை வழங்குவதனால் மட் டுமே நல்லிணக்கத்தை ஏற் படுத்தி விட முடியாது, பல்வேறு விடயங் கள் குறித்து அவதானம் செலுத் தப்பட வேண்டும்.

யுத்த நிறைவின் பின்னர் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்ப டுத்த அரசாங்கம் பல்வேறு முயற் சிகளை எடுத்துள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச ரீதியில் தண்டனை பெற்றுக்கொடுக்க சில தமிழ் அர சியல் கட்சிகள் முயற்சித்து வரு கின்றன.

யுத்தத்தின் இறுதி வாரங்கள் தொடர்பில் மட்டும் படையினருக்கு எதிராக விசாரணை நடத்த அனு மதிக்க முடியாது.

யுத்தத்தின் ஒட்டுமொத்த செயற் பாட்டையும் அவதானிக்க வேண்டு மே தவிர, இறுதிக் கட்ட போர் தொடர்பில் மட்டுமே கவனம் செலுத் துவதில் பயனில்லை.

யுத்தத்தில் ஈடுபட்ட 11 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்கு அர சாங்கம் புனர்வாழ்வு அளித்துள் ளது என்றார். (அ-2)

## நவிப்பிள்ளையை கண்டித்து கடிதம் அனுப்பியது அரசு

(கொழும்பு)


ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமை கள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை பக்கச்சார்பாக செயற்படுவதாக தெரி வித்து இலங்கை அரசாங்கத்தின் சார்பில் முறைப்பாட்டு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் செய லாளர் சேனுகா செனவிரட்னவினால இந்த கடிதம் அனுப்பி வைக்கப்பட் டுள்ளது.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா தாக்கல் செய்யவுள்ள பிரே ரணை யை ஐக்கிய நாடுகளின் மனிதவுரி மைகள் ஆணையாளர் நவநீதம்பிள் ளையே தயாரித்து வழங்கியதாக வும் இலங்கை அரசாங்கத்துக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் அவ ரது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய நாடு களின் மனித உரிமைகள் ஆணை யாளர், தமது கடமையை செய்ய தவறி இருப்பதாக அவர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


யா/ வயாவிளான் மத்திய மகா வித்தியாலய நவோதயப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் வி.ரி.ஜெயந்தன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் நிற்பதையும் விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் மாணவர்களின் உடற்பயிற்சியையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)






முழங்காவில் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றுள்ளன. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் வெற்றிபெற்ற வீரனுக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கப்படுவதையும் மாணவர்களின் இடைவேளை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்: பூநகரி செய்தியாளர்)




யா/உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற அதிபர் ஐ.விஜயகாந்தன் தேசியக் கொடியேற்றுவதையும் அருகில் அதிபர் இரா.ஜெயக்குமார், ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி.இ.கருணாநிதி, ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் எஸ். சிவராஜா ஆகியோர் அருகில் நிற்பதையும் மாணவர்களின் அணி நடையையும் படங்களில் காணலாம்.


யாழ். கோப்பாய் சரவணபவானந்தா மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றபோது....




## நிகழ்வின் நிழல்கள்

தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. விளையாட்டு நிகழ்வுக்குரிய அனைத்து வெற்றிக் கேடயங்களையும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன் வருடாவருடம் வழங்கி வருகின்றார். நிகழ்வில் பாடசாலையின் முதல்வர் காரான சிங்கம் தலைமையுரையாற்றுவதையும் வெற்றிபெற்ற மாணவருக்கு வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன் வெற்றிக் கேடயத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)




யாழ். இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டியின் முதல் அங்கமாக இடம்பெறும் வீதியோட்ட நிகழ்வுகள் இடம்பெற்றன. இளநிலைப் பிரிவில் முதலாம் இடத்தை கார்த்திகன்.(பசுபதி இல்லம்) இரண்டாம் இடத்தை ஜே.கிருதகணேஷன் (நாகலிங்கம் இல்லம்) மூன்றாம் இடத்தை எஸ். நிஷாந்தன் (நாகலிங்கம் இல்லம்) பெற்றனர். முதுநிலைப்பிரிவில் முதலாம் இடத்தை எஸ்.சுபராஜ் (பசுபதி இல்லம்) ஜசிந்தன் (செல்லத்துரை இல்லம்) சதீஸ் (சபாபதி இல்லம்) ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 3 நிமிடங்களில் முடிவெடுத்த ஜெ! நடந்தது என்ன...? -நேரடி ரிப்போட்-



ராஜீவ் கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தூக்குத் தண்டனை ரத்து என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. இது 18 ஆம் திகதி காலையில் வந்தது. அப்போது சட்டசபையில் இருந்தார் ஜெயலலிதா. அவருக்கு இந்தத் தகவல் தரப்பட்டது. அதன்பிறகு தன்னுடைய அறைக்கு ஜெயலலிதா வந்தார். அப்போதுதான், தமிழக அரசு இவர்களை விடுதலை செய்யலாம் என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சொல்லியிருக்கும் தகவல் அவருக்குச் சொல்லப்பட்டது. ஆயுள் தண்டனை என்பது வாழ்நாள் முழுவதும் சிறைவாசமிருக்க வேண்டும். ஆனால், குற்றவிசாரனைச் சட்டப்பிரிவு 432 மற்றும் 433 ஏ பிரிவுப்படி அரசு எடுக்கும் தண்டனை மாற்றுதல் அல்லது தள்ளுபடி செய்தல் நடவடிக்கைக்கு உட்பட்டது என்று சொல்லப்பட்டிருந்தது. அதனைப் படித்ததுமே இவர்களை விடுதலை செய்தால் என்ன என்று தனக்குத்தானே கேட்டுக்கொண்டு விடுதலை செய்வது என்ற முடிவுக்கு வந்தார். இதற்கு அவர் எடுத்துக்கொண்ட காலநேரம் **மூன்று நிமிடங்கள்தான்!**

விடுதலை செய்வது என்று முடிவெடுத்த பிறகுதான் அதுபற்றிய சட்ட ஆலோசனைகளை நடத்த ஆரம்பித்தார். செவ்வாய்க்கிழமை மாலையும் இரவு பெரும்பாலான நேரம் அவர் வழக்கறிஞர்களோடுதான் ஆலோசனையில் இருந்தார். இதில் சென்னை வழக்கறிஞர்களை விட, டில்லி வழக்கறிஞர்கள்தான் அதிகமாக இருந்தனராம். அனைவரிடமும் இவர் தொலைபேசியில் பேசிக்கொண்டேயிருந்தார். இன்றைய நிலவரப்படி அவர்கள் ஆயுள் தண்டனைக் கைதிகள். அவர்களை விடுதலை செய்ய மத்திய அரசு யாரையும் கேட்க வேண்டியதில்லை என்று சொன்னார்கள் சிலர். அமைச்சரவை கூடி, முடிவெடுத்துவிடுங்கள் என்றார்கள். இதில் கவர்னர் ஆலோசனை கேட்கலாம் என்றார்கள். விடுவிக்கவேண்டும். அதற்கான சூழ்நிலைகளை மட்டும் சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டு ஜெயலலிதா அமைதியாக இருந்தார்.

அதன்பிற்குதான் விடுவிக்கும் போது என்னமாதிரியான வியாக்கியானங்களைச் சொல்வது என்று முடிவெடுத்தார்கள் வழக்கறிஞர்கள். இப்போதே அறிவிப்பதா? காலதாமதம் செய்வதா என்பதில் ஜெயலலிதாவுக்குக் குழப்பம் இருந்தது. காலதாமதம் செய்தால் மற்றவர்கள் பேச்சைக்கேட்டு இந்த முடிபுக்கு வந்ததாகச் சொல்லிவிடுவார்கள் என்று நினைத்த ஜெயலலிதா உடனடியாக இதனைச் செய்துவிடுவது என்று முடிவெடுத்தார். அமைச்சரவையைக் கூட்டி அறிவித்தால் சர்ச்சையை அதிகம் தவிர்க்கலாம் என்பதால் 19 ஆம் திகதி காலையில் அமைச்சரவையைக் கூட்டினார். சட்டமன்றம் நடக்கும் காலகட்டம் என்பதால் வெளியில் அறிக்கை வெளியிட முடியாது. சட்டமன்றத்தில்தான் அறிவிப்புச் செய்ய வேண்டும். அதனால் அறிக்கையைத் தயாரிக்கச் சொன்னார். சட்டரீதியாக அந்த அறிக்கை தயாரானது. தேர்தல் காலம் என்பதால் அரசியல் ரீதியான நன்மைகளைத்தானே அரசியல்வாதிகள் முக்கியமாக நினைப்பார்கள். அதனால் முன்பு இவர்களது விடுதலைப்பிரச்சினை வந்தபோது கருணாநிதி என்ன சொன்னார் என்பதை எல்லாம் எடுத்து இந்த அறிக்கையில் சேர்க்கச் சொன்னார்.

அறிக்கை தயாராகி வந்ததும் அதில் குறிப்பிட்ட இடங்களில் திருத்தங்கள் செய்தார். ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்தபோது படுகொலை செய்யப்பட்டார் என்று அறிக்கையில் இருக்கிறது. ஆனால், பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வந்தபோது விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார் என்று முதலில் இருந்ததாம். அதில் விடுதலைப்புலிகள் என்ற சொற்களை நீக்கச்சொன்னாராம் முதல்வர். நான்கு பக்க அறிக்கையில் ஒரு இடத்தில் கூட விடுதலைப் புலிகள் என்ற வார்த்தையே இல்லை என்பதையும் உற்றுப்பாரும். அதேபோல் சாந்தன், முருகன், பேரறிவாளன் பெயருக்கு முன்னால், திருவாளர்கள் என்ற சொல்லைச் சேர்த்ததும் முதல்வர்தான் என்கிறார்கள். இவர்களது பெயர் வருமிடத்தில் எல்லாம் திருவாளர்கள் என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளது. அந்தளவுக்கு அவர் கவனமாக இருந்துள்ளார்.

மறுநாள் 19 ஆம் திகதி காலையிலேயே மூன்று பேரின் விடுதலை சம்பந்தமாக தமிழக அரசு உத்தரவு ஏதோ போடப் போகிறது என்று தெரிந்துவிட்டது. அனைத்து அமைச்சர்களுக்கும் அவசர அமைச்சரவைக் கூட்டம். உடனே வாருங்கள் என்று ஒரு ஆணை வந்து சேர, சட்டசபைக்கு போகத் தயாராக இருந்தவர்கள் எல்லோரும் அடித்துப்பிடித்து கோட்டைக்குப் போனார்கள். காலை 10 மணிக்கு சட்டசபை கூடியது. ஆனால் அதற்கு முன்பே அமைச்சரவை கூடி கலைந்தது. அறிவிப்பு ஏதோ வரப்போகிறது என பத்திரிகையாளர்கள் காத்திருந்தார்கள். ஆனால் சபை தொடங்கும் வரையில் வெளிவரவில்லை. சட்ட சபை கூடியது. முதலில் கேள்வி நேரம். வழக்கமாக கேள்வி நேரத்தில் ஒதுக்கப்படும் கேள்விகளின் அளவை இப்போது குறைத்திருந்தார்கள். எல்லாம் ஒரு திட்டத்தோடுதான் பயணம் ஆகிக் கொண்டிருக்கிறது என்பதை பத்திரிகையாளர்கள் மோப்பம் பிடித்து விட்டனர். கேள்வி நேரம் முடிந்ததும் விதி 110 இன் கீழ் அறிக்கை ஒன்றை வாசித்தபோதுதான் ஏழு பேரின் விடுதலை உலகுக்கு தெரியவந்தது.

ஈழப்பிரச்சினையில் ஜெயலலிதா கவனமாக இருந்து வருகிறார். ராஜீவ் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட கைதிகளின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும். இலங்கை மீது பொருளாதாரத் தடைவிதிக்க வேண்டும். ஐ.நாவில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும். இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பெயரளவுக்குக் கூட பங்கெடுக்கக் கூடாது என சட்டமன்றத்தில் அடுத்தடுத்து ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகத் தீர்மானம் கொண்டு வந்த ஜெயலலிதாவின் செல்வாக்கு, தொடர்ந்து உயர்ந்து வந்தது. இந்த நிலையில்தான் தஞ்சாவூர் விளாரில் ஈழத் தமிழர்களின் படுகொலையைப் படம் பிடித்துக் காட்டும் முள்ளிவாய்க்கால் முற்றத்தின் திறப்புவிழாவுக்குதமிழக அரசுமுட்டுக்கட்டை போட்டதோடு அதன் சுற்றுச்சுவர் இடித்து தரைமட்டம் ஆக்கப்பட்டது. இதில் ஜெயலலிதா மீது விமர்சனங்கள் வந்தன. இந்த நேரத்தில் மூன்று பேரின் தூக்கு தண்டனை இரத்தான உத்தரவு வெளியானதும் அதைசரியாகப்பயன்படுத்திக்கொள்ள நினைத்தார் ஜெயலலிதா. அதன் வெளிப்பாடுதான் ஏழுபேர் விடுதலை அறிவிப்பு. காங்கிரஸ் மீது தொடர்ந்துகடுப்பைக்காட்டிவரும்ஜெயலலிதா, ஒரேகல்லில்இரண்டுமாங்காய் அடிக்க நினைத்து காங்கிரசுக்குப் பாடம் புகட்ட இதை பயன்படுத்திக் கொண்டாராம்!

இந்த விடயம் முதலில் ராகுலுக்குத்தான் சொல்லப்பட்டது. அப்போது அவர் உத்தரப்பிரதேச மாநிலம் அமேதி தொகுதியில் இருந்தார். இப்படி முடிவெடுக்க அது என்ன; பயங்கரவாதம் ஆட்சி செய்யும் மாநிலமா? என்று கேட்டாராம் ராகுல். மரண தண்டனை வேண்டாமா, கூடாதா என்று விவாதம் செய்வது வேறு. ஆனால் முன்னாள் பிரதமர் ஒருவரைக் கொன்றவர்களை பட்டவர்த்தனமாக விடுதலை செய்வதாக அமைச்சரவையில் தீர்மானம் போடுவது என்பது வேறு. இதன்மூலம் அந்தப் படுகொலையை நியாயப்படுத்துகிறாரா ஜெயலலிதா? என்று கேட்டாராம். பூராப் என்ற இடத்தில் நடக்க இருந்த பொதுக்கூட்டத்தில் அவர் பேசுவதற்காக போய்க்கொண்டு இருந்தபோதுதான் இந்தத் தகவல் அவருக்குக் கிடைத்தது. அங்கு மைக் கிடைத்ததும் இந்த விடயத்தையே பேசிவிட்டார் ராகுல். கொலைக் கைதிகளை விடுதலை செய்யப்போவதாக அறிவித்திருப்பது எனக்குக் கவலை தருகிறது. ஒரு பிரதமர் கொலைக்கே நீதி கிடைக்கவில்லை என்றால் சாதாரண மனிதர்களுக்கு என்ன நீதிகிடைக்கும்? என்றுகேட்டார். அதன் பிறகுதான் அவர் சோனியாவுக்கே போன் செய்ததாக சொல்கிறார்கள்.


மிக அளவுக்கு அதிகமாக தமிழக அரசு போய்க் கொண்டிருக்கிறது என்று அப்போது சொன்னாராம் சோனியா. நம்மைஎப்போதும் அவருக்குப் பிடிக்காது. அதற்காக பயங்கரவாதிகளையா ஆதரிப்பார்கள்? என்று கேட்டாராம் சோனியா. அதன் பிறகு அவரது ஆலோசகர்களோடு பேசியிருக்கிறார் சோனியா. சட்டவிரோதமான பயங்கரவாதிகளை விடுதலை செய்யும் ஆட்சியை இரத்துச் செய்யலாம் என்ற யோசனையில் சோனியா ஆலோசனைகள் நடத்தியதாகச் சொல்கிறார்கள்.

உடனடியாக மூன்று நாட்களுக்குள் பதில் அளிக்காவிட்டால் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று அறிவித்ததும் அவர்களைக் கோபப்படுத்தியது. உடனடியாகத் தடை வாங்குங்கள் என்று சோனியா சொன்னார். தீர்ப்பளித்தது தலைமை நீதிபதி என்பதால் யோசித்திருக்கிறார்கள். நாம் தீர்ப்புக்குத் தடை கேட்கவில்லையே... தமிழக அரசின் முடிவுக்குத்தானே தடை கேட்கப் போகிறோம் என்று சட்டத்துறை சிக்கலை விடுவித்ததாம்.

அதன்பிறகுதான் உச்ச நீதிமன்றம் போனார்கள். தமிழக அரசின் நடவடிக்கைக்கு இடைக்காலத்தடை விழுந்தது. இதனை எதிர்பார்த்துக் காத்திருந்தது போலவே கவலைப்படாமல் இருந்தார் ஜெயலலிதா. எப்படி விடுவிக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் கேட்கிறது என்றாராம் வழக்கறிஞர் ஒருவர். இதில் நீண்ட விளக்கம் சொல்வதற்கு என்ன இருக்கிறது? தமிழக அரசு நினைத்தால் விடுவிக்கலாம் என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பிலேயே இருக்கிறதே.... அப்புறம் என்ன? என்றாராம் ஜெயலலிதா. உடனடியாக விடுவிக்கப்படுவார்கள் என்ற சூழ்நிலை இப்போது இல்லை. இன்னும் சில வாரங்கள் ஆகலாம்!







-ஜுனியர் விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியை வீட்டுக்கனுப்ப எதிர்க்கட்சிகள் பொறிவைப்பு

## சஜின்வாஸ் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்ப போவதாக நினைத்து கொண்டு எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் ஆளுக்கொரு பொறிகளை வைத்து வருவதாக ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பலப்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையில்ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பி விட்டால் இந்த நாட்டை ஆட்சி செய்வது யார்.

அப்படியான ஒருவர் இருப்பதாக கண்ணுக்கு எட்டிய தூரத்திலும் தெரியவில்லை. மக்கள் இதனை நன்கு அறிந்துள்ளனர்.

விருப்பமில்லாத கட்சிகளை சேர்ந்தவர்கள் ஆளும் கட்சியை சுற்றி அணிதிரண்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பது கிராமத்து கட்சி. அது சிறிய மனிதர்களின் கட்சி. நாட்டைப் போல எமக்கு கிராமங்களும் முக்கியமானவை.

கடந்த 8 வருடங்களில் தனிநபர் வருமானம் பாரியளவில் அதிகரித்துள்ளது.

அதேபோல் நாட்டின் அபிவிருத்தி பணிகளும் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தில் 70 வீதம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திலேயே நாட்டு மக்கள் ஜனாதிபதியையோ, பிரதமரையோ தெரிவு செய்கின்றனர்.

அப்படியான ஒருவர் நாட்டில் உள்ள எதிர்க்கட்சிகளில் இல்லை என்றார். (அ-2)

# தமிழ் நாட்டுக்கு கடத்தப்பட்ட 35 கிலோ தங்கம் பறிமுதல்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து தமிழகத்திற்கு கடத்தி செல்லப்பட்ட 35 கிலோ தங்கத்தை பொலிஸார் பறிமுதல் செய்து 2 மீனவர்களையும் கைது செய்துள்ளனர்.

இலங்கையில் இருந்து தங்கம் கடத்தி வரப்படுவதாக மண்டபத்திலுள்ள தமிழக கடலோர காவல் பிரிவு பொலிஸாருக்கு இரகசிய தகவல் வந்தது.

இதையடுத்து, மண்டபம் கடலோர காவல் பிரிவு தலைமையிலான பொலிஸார் பாம்பன் புகையிரத நிலையத்தில் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது, சந்தேகத்திற்கு இடமான நிலையில் புகையிரதத்தில் ஏறக் காத்திருந்த இருவரை பிடித்து பொலிஸார் விசாரணை செய்தனர்.

விசாரணையில், அவர்கள் இருவரும் மீனவர்கள் என்றும், இராமேஸ்வரம் புதுரோடு பகுதியை சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்தது.

இருவரிடமும் இருந்து சுமார் 35 கிலோ எடை கொண்ட 12 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கக் கட்டிகளை பறிமுதல் செய்த பொலிஸார் அவர்களையும் கைது செய்தனர்.

மேலும் பொலிஸார் நடத்திய விசாரணையில், இலங்கையில் இருந்து வந்த கடத்தல் நபர்கள், கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் இருவரிடமும் தங்கக் கட்டிகளை கொடுத்து மதுரையில் ஒரு நபரிடம் ஒப்படைக்க கூறியிருக்கின்றனர்.

இதற்கு கூலியாக 60 ஆயிரம் ரூபாய் வழங்க பேரம் பேசியுள்ளதும் தெரியவந்துள்ளது. (அ-2)

# போதைப்பொருள் பாவனை அதிகம்

## அஸ்கிரிய மாநாயக்கர்

நாட்டில் இன்றுள்ள சில நபர்கள் சோறு சாப்பிடுவதை நிறுத்தினாலும் போதைப் பொருள் பாவனையை நிறுத்த முடியாதவர்களாக இருப்பதாக அஸ்கிரிய மாநாயக்கர் உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சின் செயலாளர் உட்பட அதிகாரிகள் மாநாயக்கரை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

போதைப் பொருள் பரவலை தடுப்பது சிரமமாகியுள்ளது. சிலர் தேசிய ரீதியாக போதைப் பொருளை நாட்டுக்குள் கொண்டு வருகின்றனர். இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து போதைப் பொருள் கலந்து வெற்றிலை, பாக்குகளையும் கொண்டு வருகின்றனர்.

கிராமங்களிலுள்ள மூத்தவர்கள் சோறு சாப்பிடுவதை விட வெற்றிலை, பாக்கை அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.

வெற்றிலை, பாக்குடன் கலந்து பயன்படுத்தும் சுண்ணாம்பு மற்றும் புகையிலை தொடர்பில் மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டியது கட்டாயம் என மாநாயக்கர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வு





யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழக்கு உற்பத்தியாளர்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் கூட்டம்வடமாகாண சபை உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் யாழ். கிறீன் கிராஸ் ஹோட்டலில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் உள்நாட்டு வர்த்தகப் பிரதி அமைச்சர் ஹேமல் குணசேகர மற்றும் வடமாகாண விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தின் போது இது வரையும் ஆயிரத்து 500 மெற்றிக் தொன் உருளைக்கிழங்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது எனவும் இன்னும் 400 மெற்றிக்தொன் மட்டும் இருப்பிலுள்ளது. இதனை சந்தைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஹேமல் குணசேகரவிடம் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மேலும் இது தொடர்பாக வடமாகாண சபை உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் வேண்டு கோளுக்கிணங்கவும் உள்நாட்டு வர்த்தகப் பிரதி அமைச்சர் ஹேமல் குணசேகர சதொச நிறுவனத்தின் தலைவருடன் தொடர்பு கொண்டு இரண்டு நாட்களுக்குள் 400 மெற்றிக் தொன் உருளைக்கிழங்கை கொள்வனவு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்திருந்தார்.

இதுவரை காலமும் உருளைக் கிழங்கை கொள்வனவு செய்து வந்த சதொச நிறுவனம் தற்போது உருளைக் கிழங்கு கொள்வனவை நிறுத்தியுள்ளதால் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தம் பிரச்சினைகளை தீர்த்து வைத்தமைக்காக உருளைக் கிழங்கு உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் தலைவர் உள்நாட்டு வர்த்தகப் பிரதி அமைச்சருக்கும் வடமாகாண சபை உறுப்பினர் அங்கஜன் இராமநாதனுக்கும் நன்றியை தெரிவித்தார். (அ)

# நளினி உட்பட நால்வர் ஓரிரு தினங்களில் விடுதலை

## வழக்கறிஞர் புகழேந்தி தெரிவிப்பு

(சென்னை)

நளினி உட்பட 4 பேரும் விடுதலையாவதில் சட்ட சிக்கல் எதுவும் எழவில்லை, அதனால், தமிழக அரசின் அறிவிப்பின்படி ஓரிரு தினங்களில் அவர்கள் விடுதலை ஆவார்கள் என எதிர்பார்க்கிறேன் என்று வழக்கறிஞர் புகழேந்தி தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற சாந்தன், பேரறிவாளன், முருகன், நளினி, ரவிச்சந்திரன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் மூன்று நாட்களில விடுதலை செய்யப்படுவார்கள் என்று தமிழக அரசு அண்மையில் அறிவித்தது.

இதனிடையே, 3 பேரின் விடுதலையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு மனுத் தாக்கல் செய்தது.

இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், 3 பேரை விடுதலை செய்வதில் நீதிமன்ற நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்று கூறி தடை விதித்தது.

இந்நிலையில், வேலூர் மத்திய சிறைச்சாலை முன்பு செய்தியாளர்களிடம் பேசிய நளினியின் வழக்கறிஞர் புகழேந்தி, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகியோரின் பெயர்கள் மட்டுமே மத்திய அரசின் மனுவில் குறிப்பிடப்பட்டு தடை பெறப்பட்டுள்ளது.

அதனால், தமிழக அரசின் அறிவிப்பின்படி ஏனைய 4 பேரும் விடுதலையாவதில் சட்ட சிக்கல் எதுவும் எழவில்லை.

ஆகவே, முறைப்படி ஓரிரு தினங்களில் அவர்கள் விடுதலை ஆவார்கள் என எதிர்பார்க்கிறேன் என்றார்.(அ-2)

# இந்திய அரசியலமைப்பை ஜெயலலிதா மீறிவிட்டார்

## நாராயணசாமி

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 7 பேரை விடுதலை செய்யும் விவகாரத்தில் மத்திய அரசுக்கு கெடு விதித்ததன் மூலம், முதலமைச்சர் ஜெயலலிதா இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை மீறியுள்ளதாக மத்திய இணையமைச்சர் நாராயணசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அவசரம் அவசரமாக தமிழக அரசு, மூன்று நாட்களுக்குள் முடிவு எடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு கெடு வைத்து ஒரு உத்தரவிட்டிருக்கிறது என்று சொன்னால், இது மத்திய மாநில அரசுகளுடைய இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள சரத்துக்களை மீறிய செயலாகும் என அவர் கூறியுள்ளார். (அ-2)

# இலங்கை -ஜப்பான் பிரதிநிதிகள் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையும் ஜப்பானும் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடல்களை நடத்தியுள்ளன.

இந்த கலந்துரையாடல் இலங்கையின் ஜப்பானுக்கான தூதுவர் அட்மிரல் வசந்த கரண்ணாகொட மற்றும் ஜப்பானின் நாடாளுமன்ற உதவி அமைச்சர் சேஜி கிஹாரா ஆகியோருக்கு இடையில் இடம் பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜப்பானுக்கு விஜயம் மேற்கொள்வது மற்றும் ஜப்பானின் இளவரசிகள் சுக்குகோ மற்றும் தக்கமாடோ ஆகியோரின் இலங்கை விஜயம் உட்பட்ட விடயங்களும் பேசப்பட்டன.

அத்துடன் இலங்கையில் ஜப்பானின் முதலீடுகள் மற்றும் கடல் வள ஒத்துழைப்பு குறித்தும் இரண்டு தரப்பினரும் விரிவாக ஆராய்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# வடக்கின் சனத்தொகை பரம்பலை புலிகளே மாற்றியமைத்தனர்

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தின் சனத்தொகைப் பரம்பலை தமிழீழ விடுதலைப் புலிகளே மாற்றியமைத்துள்ளனர் என பாதுகாப்பு அமைச்சு குற்றம் சுமத்தியுள்ளது. அவ்வமைச்சு மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் வாழ்ந்து வந்த சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களை தமிழீழ விடுதலைப் புலிகள் பலவந்தமான முறையில் வெளியேற்றியிருந்தனர்.

வடக்கு மாகாணத்திலிருந்து ஒரு இலட்சம் முஸ்லிம்களும் 20 ஆயிரம் சிங்கள மக்களும் வெளியேற்றப்பட்டிருந்தனர்.

1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 மணித்தியாலத்திற்குள் வடக்கு முஸ்லிம் மக்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களை நியாயப்படுத்தும் முனைப்புக்களில் அமெரிக்கத் தூதரகம் ஈடுபட்டுள்ளது.

இதன் ஓர் கட்டமாக அண்மையில் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் வடக்கிற்கு விஜயம் செய்து தகவல்களை திரட்டியிருந்தனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வீட்டுத்திட்டம் கோரி பெரியகட்டு மக்கள் ஆர்ப்பாட்டம்



(குருமன்காடு)

மீள்குடியேறி நீண்டகாலமாகியும் வீட்டுத் திட்டம் வழுங்கப்படாமையி னால் வவுனியா பெரியகட்டு மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பெரியகட்டு கிராம மக்களே இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு காலத்தில் இடம் பெயர்ந்த இம் மக்கள் 2011 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில் சுமார் 245 குடும்பங்கள் வாழ்ந்த இக் கிராமத்தில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படாமையினால் தற்போது 13 குடும்பங்கள் மாத்திரமே மீள்குடியேறி நிரந்தரமாக வசித்து வருகின்றனர்.

மக்கள் நீண்ட காலம் வாழாததன் காரணமாக காட்டுப்பகுதியாக மாறியுள்ள இக் கிராமம் காட்டு விலங்குகள் மற்றும் திருடர்களின் அச்சுறுத்தலினாலும் தற் போது மக்கள் நடமாட்டம் அற்ற அழிந்து செல்லும் கிராமமாக மாறி வருகின்றது.

இந் நிலையிலேயே மீள்குடியேறியுள்ள தமக்கு இந்திய வீட்டுத்திட்டத்தில் வீடுகளை தரவேண்டும் என கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

செட்டிகுளம் பிரதேச செயலாளர் முதலாம் கட்ட இந்திய வீட்டுத்திட்டத்தில் தமக்கு வீடுகள் வழங்கப்படுமென தெரிவித்திருந்த போதிலும் தற்போது மூன்றாம் கட்டத்திலும் வீட்டுத்திட்டம் வழங்க நடவடிக்கை எடுக்க வில்லை என அவர்கள் குற்றம் சாட்டியுள் ளனர்.

இதேவேளை, விவசாய கிராமமான தமது கிராமத்தில் காணப்பட்ட 80 இற்கும் மேற்பட்ட கிணறுகள் யுத்த காலத்தில் மூடப்பட்டு ள்ளதுடன் தமது கிராமத்தில் இடம் பெயர்ந்த மக்களை தங்க வைத்திருந்த காலத்தில் கிராமத்தின் எல்லைகளை மாற்றும் செயற்பாடும் இடம்பெற்றுள்ள தாகவும் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் ஜனசக்தி திட்டத்தில் தாம் வங்கிகளில் சேமித்த நிதியினையும் தற் போது பெற முடியாத நிலையில் உள்ளமையி னால் பல்வேறான கஸ்டங்களை எதிர்கொள் வதாகவும் தெரிவிக்கும் இம் மக்கள் பல கிராமங்களில் இந்திய வீட்டுத்திட்டத்தில் வழங்கப்பட்ட வீடுகள் வன விலங்குகளின் தங்குமிடமாக மாறியிருப்பதாகவும் சுட்டிக் காட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

(அ-9-266-250)

## விளக்கமறியல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதி யில் உதவி கேட்பதாக வீட்டினுள் சென்ற நப ரொருவர் அங்கிருந்த பெண்ணை துஷ்பிர யோகம் செய்ய முற்பட்டதாக குற்றஞ்சாட்டப் பட்டு முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர்படுத் திய போது, நாளை மறுதினம் புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சம்பவதினம் குறித்த நபர் தனது மைத் துனி முறையான பெண்ணின் வீட்டினுள் புகுந்து, காசு வாங்க வந்ததாகக் கூறி அப் பெண்ணை துஷ்பிரயோம் செய்ய முற்பட்டுள் ளார்.

அவ்வேளை பெண் கூச்சல் போட்டமை யினால் அயலிலுள்ளவர்கள் அப்பெண் ணைக் காப்பாற்றியதோடு, குறித்த நபரையும் கைது செய்து முள்ளியவளைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவ்வழக்கை விசாரித்த முல்லை. மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா நாளை மறுதினம் புதன்கிழமை வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட் டுள்ளார். - (அ-9)










கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவிலுள்ள கரியாலைநாகபடுவான் கிராமத்தில் 11 இலட்சம் ரூபா நிதி செலவில் அமைக்கப்பட்ட பால் சேகரிப்பு நிலையம் திறந்து வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது...

# ச.ச.நிலையங்களின் செயற்பாடுகள் விஸ்தரிக்கப்பட வேண்டியது அவசியம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சனசமூக நிலையங்களின் செயற்பாடுகளை விஸ் தரிக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாவட்டத்திலுள்ள 6 பிரதேச செயலர் பிரிவுகளிலும் 640 கிராமங்கள் உள்ளன. ஆயினும் சனசமூக நிலையங்களுக்கான கட்டடங்கள் இன்மையால் பல கிராமங்களில் இந்நிலையத்தின் பங்களிப்பு கிடைக்கப்படா துள்ளது.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 4 வருடங் கள் கடந்துள்ளபோதிலும் சனசமூக நிலை யங்களுக்கான காணிகளில் கட்டடங்கள் கட்டி கொடுக்கப்படவில்லை.

இங்கு சனசமூக நிலையங்களின் அமைப் புக்கள் உள்ளன.

இவ் அமைப்புக்களிடம் சனசமூக நிலைய பணிகளை முன்னெடுப்பதற்காக வருடாவ ருடம் 5 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்படுகின் றது.

இந்நிதிப்பங்களிப்பும் தற்போது நிறுத்தப் பட்டுள்ளது.

இதனால் கிராமங்களில் இவ் அமைப்புக் களால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவ டிக்கைகளும் தடைப்பட்டுள்ளன.

எனவே, முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்க ளுக்கான கட்டடங்களை அமைத்து அதன் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முல்லை. மாவட்ட அரசாங்க அதிபரும் பிராந்திய உள் ளூராட்சி ஆணையாளரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (அ-9-267)

# வைத்தியசாலையில் நட்பு நிலையம் திறப்பு

(கிளிநொச்சி)

மாஞ்சோலையிலுள்ள முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நட்பு நிலை யம் எனும் நிலையம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்பட வுள்ளது.

கெயார் சர்வதேசம் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் அமைக்கப்பட்ட இப் பிரிவினை மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் திறந்து வைக்க வுள்ளார்.

வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண் கள் தொடர்பான விடயங்களை கையாளவும் அவர்களுக்கு பொருத்தமான புனர்வாழ்வு செயற்றிட்டங்களை வடிவமைக்கவும் இந்த நட்பு நிலையம் செயற்படுமென கெயார் சர்வதேசம் நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்கனவே தமது நிறுவனத்தின் நிதி அனுசரணையில் செயற் படுத்தப்படும் இத் திட்டம் தற்போது முல்லைத் தீவு மாவட்டத்திலும் பெண்களின் நலன் கருதி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அவ்வதி காரி மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-9-254)

# தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

(முல்லைத்தீவு)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை யின் முல்லைத்தீவு மாவட்ட பணிமனையி னால் தொழில் பெறுவதற்கான பயிற்சி நெறி களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், பாலிநகரில் தகவல் தொழில்நுட்பம், தையற்கலை, வீட்டு மின்னி ணைப்பு போன்ற கற்கை நெறிகள் நடை பெறவுள்ளன.

அத்தோடு ஒட்டுசுட்டானில் தகவல் தொழில் நுட்பம், தையற்கலை போன்ற கற்கை நெறி களும் முல்லைத்தீவு தொழில்நுட்ப வளா கத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், கணனி வன்பொருள் தொழில்நுட்பம், பெண் களுக்கான அழகுக்கலை, சிகை அலங்காரம், தையற்கலை, முச்சக்கரவண்டி திருத்துநர், அலுமினியக் கட்டுமானம், வீட்டு மின்னி ணைப்பு, நீர்க்குழாய் பொருத்துநர், வெளி யிணைப்பு இயந்திர திருத்தம் ஆகிய கற்கை நெறிகளும் ஆரம்பமாகவுள்ளன.

எனவே ,மேற்படி கற்கை நெறிகளை கற்க விரும்பும் விண்ணப்பதாரிகள் உதவிப் பணிப்பாளர், மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம், மாங்குளம் வீதி, முல்லைத்தீவு எனும் முக வரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ தங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக் கங்களை எழுதி அனுப்புவதனூடாக இணைந்து கொள்ள முடியும்.

அத்தோடு, 0710318989 என்ற தொலை பேசி இலக்கம் ஊடாக தமது பெயர், முகவரி யுடன் கற்க விரும்பும் கற்கை நெறியையும் குறுந்தகவல் மூலம் அனுப்பியும் இணை ந்து கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள் ளது. (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகளும் குற்றவாளிகள்

## ஆங்கில ஊடகம் தகவல்

(கொழும்பு)

இலங்கையின் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவில் உயர் பதவியில் உள்ளவர்களே பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் அவர்கள் எவ்வாறு ஏனையவர்களின் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை செய்வார்கள் என்று ஆங்கில ஊடகம் ஒன்றும் கேள்வி எழுப்பி இருக்கிறது.

தற்போதைய இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் உள்ள முக்கியமான உறுப்பினர்கள் அனைவரும்.

இலங்கை அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர்களது உறவினரகளாக உள்ளனர்.

அதேநேரம் அரசாங்கத்தின் பல உறுப்பினர்கள் பாரியளவில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந் நிலையில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளப் போவதில்லை என்று அந்த ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது.

(அ-2)

## பிரிவுத்துயர் பகிர்வு



### ஆறன் துரையப்பா

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் இல. 89 , 2 ஆம் குறுக்குத்தெரு , யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறன் துரையப்பா நேற்று முன்தினம் சனிக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி மார்கிரட் குமாரகுலசிங்கி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்கிரட் குமார குலசிங்கி கடந்த 21 ஆம்திகதி வெள்ளிக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு திருப்பலி இன்று முற்பகல் 10 மணி க்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு பூத வுடல் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய் யப்படும்.



### வீரசிங்கம்செல்வநாதன்

(இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்) அல்வாய் கௌரி தோட்த்தைப் பிறப்பிடமாகவும் இல 270 நாயன்மார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் செல்வநாதன் கடந்த 21 ஆம்திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நல்லூர் புனித ஆசிர்வாதப்பர் தேவாலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை 23 நாடுகள் ஆதரிக்கும்-ஆங்கில ஊடகம்

**ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா இம்முறை கொண்டு வரும் தீர்மானத்தை 23 நாடுகள் ஆதரிக்கும் என்று உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.**

அமெரிக்கத் தீர்மானம் ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையை அடிப்படையாக கொண்டதாக இருக்கும்.

இந்தியாவும் கூட இலங்கைக்கு எதிராக வாக்களிக்கும் என்றும், இலங்கைக்கு எதிராக வாக்களிக்கும் படி தாம் தொடர்ந்து பரப்புரைகளை முன்னெடுப்பதாகவும், உலகத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிராக, செக் குடியரசு, எஸ்தோனியா, மொன்ரெனிக்ரோ, ருமேனியா, ஒஸ்ரியா, பிரான்ஸ், ஜேர்மனி, அயர்லாந்து, இத்தாலி, பிரித்தானியா, அமெரிக்கா, தென்கொரியா, இந்தியா, பெரு, ஆரஜென்ரீனா, பிறேசில், சிலி, கோஸ்டாரிக்கா, சியராலியோன், ஐவரி கோஸ்ட், பெனின், மெக்சிகோ, மசிடோனியா ஆகிய 23 நாடுகள் வாக்களிக்கும்.

நாம் தொடர்ந்து ஐ.நா மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகளின் தலைநகரங்களுடன் தொடர்புகளை வைத்துள்ளோம்.

எதிர்காலத்தில், நடுநிலையாளர்களாகத் தாம் பங்கேற்பதானால், தாம் நடுநிலையாக இருக்க வேண்டும் என்பதற்காக தென்னாபிரிக்கா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல தவிர்க்கலாம்.

ஆனால், 2011இல் ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை வெளியான போது, ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ், அனைத்துலக விசாரணைக்கு ஆதரவு தெரிவித்திருந்தது.

வரலாற்று பின்னணியின் அடிப்படையிலும், அண்மைய நிலவரங்களின் அடிப்படையிலும், இலங்கைக்கு ஆதரவாக, 13நாடுகள், அமெரிக்கத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கலாம் என்று கருதப்படுகிறது.

ரஷ்யா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், வியட்நாம், குவைத, மாலைதீவு, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ, இந்தோனேசியா, சீனா, கொங்கோ, கியூபா, வெனிசுவேலா ஆகிய நாடுகளே அவையாகும்.

ஜப்பான், கசகஸ்தான், கென்யா, எதியோப்பியா, பொட்ஸ்வானா, புர்கினாபாசோ, காபோன் உள்ளிட்ட 8 நாடுகள் வாக்கெடுப்பின் போது நடுநிலை வகிக்கும் என்றும், இரண்டு நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது என்றும் உலகத தமிழர் பேரவை தெரிவித்துள்ளது. (அ-2)

## முகப்புத்தக பயன்பாடு குறித்து விழிப்புடன் இருங்கள் ஜனாதிபதி தெரிவிப்பு

சமூக வலைத்தளமான முகப்புத்தகத்தை சிறுவர்கள் பயன்படுத்துவது தொடர்பில் மிகவும் விழிப்புடன் இருக்குமாறு பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஹெட்டிபொலவிலுள்ள மஹிந்தோதய பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த வேண்டுகோளை முன் வைத்தார்.

இந்த முகப்புத்தக விடயம் தொடரபில் மூன்று முதல் நான்கு வருடங்களுக்கு முன்னரே பெற்றோருக்கு எச்சரிக்கை விடுத்ததாகவும் ஜனாதிபதி கூறினார்.

நாம் சிறுவர்களை தவறான பாதையில் செல்ல விட்டால், இந்த நாட்டுக்கு நல்லதல்ல. பெற்றோர் விழிப்புடன் இருக்க வேண்டுமென்கின்ற அதேவேளை, பிள்ளைகளும் முகப் புத்தகத்தை பற்றிய சரியான புரிந்துணர்வைக் கொண்டிருக்க வேண்டும. மேலும், இதிலுள்ள நன்மை தீமைகளையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். பெற்றோரும் ஆசிரியர்களும் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அவர் கூறினார். (அ-2)

# தமிழ் மக்களுக்கு உரிமை கிடைத்தால் கூட்டமைப்பு அரசியலிலிருந்து ஒதுங்கும்

## அரியம் எம்.பி தெரிவிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக தமிழர் ஒருவரை நிறுத்துவாராக இருந்தால், தமிழ்த் தேசியக கூட்டமைப்பு எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுபபினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இயலுமாக இருந்தால் இதைச் செய்யட்டும். அவர்கள் எல்லாம் சமஉரிமை என்றுதானே கூறுகறார்கள். இதைச் செய்தால் தமிழ்த தேசியக் கூட்டமைப்பிலுள்ள நாங்கள இராஜினாமாச் செய்துவிட்டு அரசியலிலிருநது ஒதுங்குவோமெனவும் அவர் கூறினார்.

துறைநீலாவணை கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கும் நிகழ்வு அச் சங்க கட்டடத்தில் நேற்று முன்தினம் நடைபெறறது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

எப்போது எமக்கு விடிவு கிடைக்கிறதோ, எப்போது எமக்கு உரிமை கிடைக்கிறதோ அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் பணியிலிருந்து ஒதுங்கும். குறிப்பாக முதலில் ஒதுங்கக்கூடியவன் நான் என்பதை இவ்விடத்தில் கூறிக்கொள்கிறேன்.

நாங்கள் ஒரு அடிமையான இனம். அடிமைப்பட்டு பல இழப்புக்களை சந்தித்த இனம். முள்ளிவாய்க்காலில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மக்களை பலி கொடுத்த இனம். அதற்கு முன்னரும் பல மக்களை பலி கொடுத்த இனம்.

அரசாங்கம் கூறுகின்ற சமாதானம் என்னவென்றால், கொங்கிறீட் மற்றும் காப்பெற் வீதிகளையும் குளங்களையும் பாலங்களையும் கட்டி விட்டு அரசாங்கத்திற்கு நன்றிக் கடனாக இருக்க வேண்டுமென்பதே.

உலகில் இன்று பேசப்படுகின்ற ஒரு பிரச்சினை இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையே ஆகும். குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழ்மக்களின் பிரச்சினையே. இது ஒரு சர்வதேசமயப்படுத்தப்பட்ட பிரச்சினையாக உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட, கிழக்கு மக்களின் தலைமையெனபதை சர்வதேசம் அங்கீகரித்து விட்டது. எமது பிரச்சினை சர்வதேசம் செல்லக் கூடாது.

எமது நாட்டில் பேசித் தீர்க்க வேண்டுமென்பதில் தந்தை செல்வா உறுதியாக இருந்தார். அதை உதாசீனம் செய்ததால் ஆயுதப் போராட்டம் வந்து இன்று சர்வதேசம் சென்றிருக்கிறோம்.

அரசாங்கத்திடம் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. அரசாங்கம் சொல்வதொன்று, செய்வதொன்று. எங்களை ஏமாற்றியே வந்துள்ளது இந்த அரசாங்கம் எந்த ஆட்சியாக இருந் தாலும் சரி தந்தை செல்வாவை ஏமாற்றியது. பிரபாகரனை ஏமாற்றியது. இப்போது சம்பந்தன் ஐயாவை ஏமாற்றத் துடிக்கிறது. ஆனால், இலங்கை அரசாங்கம் எம்மை ஏமாற்றியது தொடர்பாக 1947ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேசத்திற்கு தெரியப்படுத்தி இருக்கிறோம்.

இப்போது மட்டக்களப்பில் பிரதேச வாதம். கிழக்கான், வடக்கான் என்பது போய் இப்போது மட்டக்களப்பான். மட்டக்களப்பான் ஒருவன தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தலைவராக இருந்தால்தான் பதவியிலிருந்து விலகி விடுவதாக ஒரு பிரதி அமைச்சர் கூறியிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின தலைவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவரென்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும். நான் திரும்பி அவரிடம் ஒன்று கேட்கின்றேன். வருகின்ற ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழனை அது மலைநாட்டுத் தமிழனாக இருக்கலாம் அல்லது கொழுமபுத் தமிழனாக இருக்கலாம். அல்லது வட, கிழக்கு தமிழனாக இருக்கலாம அவனை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்துங்கள் பாரக்கலாம் என்றார். (அ-2)

# புதைக்கப்பட்டவர்களுக்காக ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



திருக்கேதீஸ்வரம் மாந்தை மனித புதைகுழியில் இருந்து இதுவரை 79 மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கான ஆத்ம சாந்தி பிரார்த்தனையும், ஏகாதசி 11 ருத்ர ஹோம பிரார்த்தனையும் நேற்றுக்காலை திருக்கேதீஸ்வர ஆலய பாலாவியில் இடம்பெற்றது.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த பிரார்த்தனை நிகழ்வில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

புனிதம் அறியாதவர்களினால் ஏற்படுத்தப்பட்ட மனிதாபிமானமற்றதும், இறை பயமற்றதுமான இச் செயலை நாம் வனமையாக கண்டிப்பதாக திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக் கிழமை மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் 29 ஆவது தடவையாக புதை குழியில் அகழ்வு பணிகள் இடம்பெற்ற பேர்து மேலும் 2 மனித எலும்புக்கூடுகள் உள்ளமை கண்டு பிடிக்கப்பட்டது. இந்நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள எலும்புக் கூடுகள் மற்றும் மனித எச்சங்களின் எண்ணிக்கை 79 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை நேற்றும் 30ஆவது தடவையாக அகழ்வுப்பணிகள் இடம் பெற்றன(அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சீனாவுடனான சுதந்திர வர்த்தகம் இலங்கை-இந்திய உறவை பாதிக்கும்

## பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டு

**சீனாவின் 21 ஆம் நூற்றாண்டுத் திட்டமான நவீன கடல் மார்க்க பட்டுப்பாதைத் திட்டத்திற்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்கும் என்று அண்மையில் சீனா சென்றிருந்த வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் உறுதியளித்திருந்தார்.**

இச் சூழ்நிலையில், இலங்கையுடன் புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான பேச்சுக்களுக்காக சீனத் தூதுக்குழு வொன்று இங்கு வந்துள்ளது.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தக- பொருளாதார ஒத்துழைப்புகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை இருதரப்பும் எடுத்துள்ளன.

இலங்கையில் ஏற்கனவே துறைமுகங்கள், சர்வதேச விமான நிலையம், அனல் மின்நிலையம், பெருந்தெருக்கள், ஹோட்டல்கள் என பல்வேறு உட்கட்டமைப்பு கட்டுமானங்கள் சீனாவின் முதலீட்டில் நடந்துள்ளன.

எனினும் சீனாவின் முதலீடுகள் நேரடி வர்த்தக - இருதரப்பு கொடுக்கல் வாங்கலாக இன்னும் முன்னேற்றம் அடையவில்லை என்று பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கையின் முக்கிய இறக்குமதி மூலாதாரமாக விளங்குகின்ற சீனா, இலங்கைக்கு பெரிய ஏற்றுமதி சந்தையாக இருக்க வாய்ப்பில்லை என்ற காரணத்தினால் நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கக் கூடிய விதத்தில் சீனாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் அமைந்தால் மட்டுமே இலங்கைக்கு நன்மை நிலையான பொருளாதார நன்மைகள் கிடைக்க வாய்ப்பிருப்பதாகவும் பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

சீனாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை இந்திய சந்தையைக் கடுமையாகப் பாதிக்கக் கூடிய வாய்ப்புள்ளதாக கொழும்புப் பல்கலைக்கழக பொருளியல் துறையின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி மு. கணேசமூர்த்தி தமிழோசையிடம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் மோட்டார் கார் ஏற்றுமதியில் இலங்கை முக்கிய சந்தையாகத் திகழ்கிறது. எதிர்காலத்தில் உருவாகக்கூடிய சீன- இலங்கை சுதந்திர வர்த்தக உறவுகள் மூலம் இந்தியாவின் சந்தை பாதிக்கப்பட வாய்ப்பிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

சீனாவைப் பொறுத்தவரை, இலங்கையுடனான பொருளாதார உறவுகள் மூலம் அந்நாட்டிற்கு கிடைக்கும் அரசியல் நன்மைகளே அதிகம் என்றும் கலாநிதி கணேசமூர்த்தி தெரிவித்தார்.

சீனாவின் புதிய அதிபரின் சிந்தனையின் படி, 21 ஆவது நூற்றாண்டின் நவீன கடல் மார்க்க பட்டுப்பாதையை கட்டியெழுப்பும் திட்டத்துக்காக சீனா அயல் நாடுகளிடம் உதவி கோருகின்றது.

அதற்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்குமா என்று இன்னும் தெரியவில்லை. இலங்கை ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானிலும் இலங்கையிலும் சீனா துறைமுகங்களை கட்டிக்கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவா மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் அமெரிக்காவின் முன்னெடுப்பில் கொண்டுவரப்படவுள்ள பிரேரணையின்போது, சீனா இலங்கைக்கு ஆதரவாக நிற்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

# அழுத்தங்களின் காரணமாகவே அரச குழு தென்னாபிரிக்கா செல்கிறது

## கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

அழுத்தங்களின் காரணமாகவே அரசாங்கப் பிரதிநிதிகள் தென்னாபிரிக்காவிற்கு விஜயம் செய்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய சூழ்நிலையின் காரணமாகவே தென்னாபிரிக்க நல்லிணக்கம் தொடர்பில் அரசாங்கம் ஆர்வம் காட்டி வருகின்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே தெனனாபிரிக்க நல்லிணக்க முனைப்புக்கள் தொடர்பில் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்திய காலங்களில் இது குறித்து பேசப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக கூட்டமைப்பு பிரதிநிதிகள் தென்னாபிரிக்காவிற்கு விஜயம் செய்திருந்தனர்.

துரதிஷ்டவசமாக அரசாங்கம் இந்த விடயத்தில் அந்தக் காலப்பகுதியில் எவ்வித ஆர்வத்தையும் காண்பிக்கவில்லை.

சர்வதேச ரீதியாக இலங்கை மீது பிரயோகிக்கப்பட்டு வரும் அழுத்தங்களே அரசாங்கத்தின் இந்த திடீர் நல்லிணக்க முனைப்புக்களுக்கான ஏதுவெனத் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க முனைப்புக்கள் முழு அளவில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு. முழு அளவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சிப்பதன் மூலம் மட்டுமே நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட முடியும்.

யுத்தத்தின் பின்னரான கள நிலைமைகளை அரசாங்கம் விளங்கிக்கொள்ளத் தவறியுள்ளது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் உள்ளிட்ட முழு அளவிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

## தொண்டராசியர்களுக்கு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொண்டராசிரியர்களிற்கான அவசர கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது

எனவே அனைத்து தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தலைவர் கேட்டுள்ளார். (அ)

# அழையா விருந்தாளிகள் எனினும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்

## தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சு

தென்னாபிரிக்காவிற்கு விஜயம் செய்துள்ள இலங்கைப் பிரதிநிதிகள் குழுவிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான பிரதிநிதிகள் குழுவொன்று தென் ஆபிரிக்காவிற்கு விஜயம் செய்திருந்தது.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பொறிமுறைமை குறித்து ஆராய்ந்து, நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்க முனைப்புக்களுக்கு அதனை பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த விஜயம் அமைந்திருந்தது.

எவ்வாறெனினும், இந்தப் பிரதிநிதிகள் குழுவிற்கு தாம் அழைப்பு விடுக்கவில்லை என தென் ஆபிரிக்கா அறிவித்துள்ளது.

குறித்த பிரதிநிதிகள் குழுவினை தமது நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு உத்தியோக பூர்வமாக அழைக்கவில்லை என அந்நாட்டு பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

எனினும், விஜயம் செய்த இலங்கைப் பிரதிநிதிகளை மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தென் ஆபிரிக்காவிற்கு விஜயம் செய்வார்கள் என எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல்பலஸ்தீனம், ருவண்டா, கொங்கோ போன்ற நாடுகளில் இடம்பெற்று வரும் முரண்பாடுகளை களைவதற்கும் தென் ஆபிரிக்கா ஒத்துழைப்பு வழங்கி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்ற தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜொகோப் சூமாவிடம், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த கோரிக்கைக்கு அமைய இலங்கைப் பிரதிநிதிகளை சந்தித்ததாகத் தெரிவித்துள்ளார். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக குழுவின் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரியிருந்தார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரையில் தமது விஜயம் தொடர்பில் கூட்டமைப்பு உறுதிப்படுத்தவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மரண அறிவித்தல்

## அமரர் திரு. ஆறன் துரையப்பா



வசாவிளானைப் பிறப்பிடமாகவும் இல. 89 , 2 ஆம் குறுக்குத்தெரு , யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறன் துரையப்பா அவர்கள் 22.02.2014 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறன்– பொன்னி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பிமுத்து– சின்னம்மாவின் அன்பு மருமகனும், யோகம்மாவின் அன்புக் கணவரும், பிறேம்குமார் (நெதர்லாந்து), சுதர்மினி (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் , கொறின் நெதர்லாந்து, நவநீதன் (LIC ஆயுட்காப்புறுதி) ஆகியோரின் அன்பு மாமனாரும், துவாரகன் (யா/ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), துதிகரன் (யா/ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), யோஷா (நெதர்லாந்து), ஷீலா (நெதர்லாந்து) ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லர் பசுபதி, மகேந்திரன் மற்றும் சுந்தரம் தம்பிஐயா, அன்னம்மா, செல்லம்மா ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்றவர்களான பரிபூரணம், முத்தையா, இராசமணி, சந்திரராசா மற்றும் யோகன், யோகராணி , சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.02.2014 இன்று ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.89,**
**2ம் குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம்.** (5675)

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த வெள்ளம் இருந்த வெள்ளத்தையும்
அள்ளிக் கொண்டு போனதாம்.

*– தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii:lk

## வட மாகாணத்துக்குப் பொருத்தமான பொருளாதாரக் கொள்கை வகுக்கவேண்டும்

போராட்ட சூழலில் தமிழ் மக்களின் வாழ்வியல் சுமையை விட இப்போது இருக்கக் கூடிய வாழ்வியல் சுமை மிகவும் கடினமானதாக உள்ளது.

இவற்றுக்குப் பல காரணங்களைக் கூறிக் கொள்ளலாம். குறிப்பாக யுத்த கால சூழலில் புலம்பெயர் உறவுகளின் உதவிகள் அதிகமாக இருந்தன. கூடவே, உள்ளூர் விவசாய உற்பத்தி முயற்சிகளுக்கான வருமான ஈட்டல்களும் திருப்தியாக இருந்தன.

ஆனால், இப்போது நிலைமை அதுவல்ல. யுத்தம் முடிந்து ஏ 9 பாதை திறக்கப்பட்ட கையோடு தென் பகுதியைச் சேர்ந்த நிதி, வர்த்தக அமைப்புக்கள் வட பகுதியை நோக்கி அதிவேகமாக வரத்தொடங்கின.

இன்சூரன்ஸ் நிறுவனங்கள், லீசிங் கம்பனிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் தங்களின் இலாப நோக்கை விதைப்பதற்கு வட மாகாணத்தை உகந்த இடமாகக் கருதின. அதேநேரம் போராட்ட சூழ்நிலையில் அடைபட்டுக் கிடந்த வட மாகாண மக்கள், வர்த்தக முயற்சிகலைத் தவிர வேறு எதனையும் அறியாதவர்களாக ஆக்கப்பட்டிருந்தனர்.

இதன் காரணமாக வட மாகாணம் முழுவதும் வர்த்தக மயம் என்று கூறும் அளவில் வர்த்த நிலையங்களை கட்டுவதே பெரும் தொழிலாகக் கருதப்பட்டது.

வட மாகாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வேலைவாய்ப்பு ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதாக இருந்தால், ஒரு கடையைப் போட்டுக் கொடுப்பதாகவே புலம்பெயர் உறவுகளும் கருதின.

சமகால சந்தை அமைப்புகளினதும், சந்தை நிலைமைகளினதும் நிலைபரங்களை அறியாத நிலையில் எல்லோரும் வர்த்தகம் எல்லோரும் கடை என்று தொழிலை ஆரம்பிக்க வர்த்தக முயற்சி தோல்வி காணலாயிற்று.

இம் முயற்சிகளை தோற்கடிப்பதில் தென் பகுதிகளில் இருந்து வந்த லீசிங் கம்பனிகளும் காப்புறுதி நிறுவனங்களும் கணிசமாகப் பங்காற்றின.

இவற்றுக்கு மேலாக யுத்த சூழ்நிலையில் வட மாகாணத்திற்குள் நுழைய முடியாமல் இருந்த தென்பகுதியில் இயங்கக் கூடிய சிறப்பு அங்காடிகள், வர்த்தக நிறுவனங்கள் அதிரடியாக வடக்கில் தங்கள் நிறுவனங்களை நிலைப்படுத்தின.

இவை காரணமாக வட மாகாணத்தில் இயங்கிய புதிய, பழைய வர்த்தக முயற்சியாளர்கள் நட்டம் அடைந்து தொழில் முறிவைச் சந்திக்கலாயினர்.

கூடவே, இயற்கையின் பிறழ்வு காரணமாக வட பகுதி விவசாயிகள் இனிமேல் விவசாயம் செய்வதில்லை என்ற வேதனையான முடிவுக்கு வரவேண்டியதாயிற்று.

இத்தகைய துன்பங்கள் காரணமாக வட மாகாணத்து பொருளாதார நிலைமை படுமோசமாகி வருகின்றது.

எனவே, எம்மைத் தாக்க வரும் பொருளாதார மந்த நிலைமைகளுக்கு உடனடியாகப் பரிகாரம் தேடவும், எங்கள் மக்களின் பொருளாதாரத்தை நிலைத்திருக்கச் செய்வதற்காகவும் எங்களுக்குப் பொருந்தக் கூடிய பொருளாதாரக் கொள்கையை வகுக்க வேண்டிய தேவை அவசரமாக ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண அரசு இங்கு இருக்கக் கூடிய துறைசார்ந்த வல்லுநர்களுடன் இணைந்து ஆய்வை மேற்கொள்ள வேண்டும்.

இளைஞர்களின் வேலைவாய்ப்பு, உற்பத்தி முயற்சிகள், விவசாயத் தொழில், சுயதொழில் முயற்சிகள், கால்நடை வளர்ப்புகள் என்றவாறு எங்கள் மண்ணில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

தனித்து நுகர்வுச் சமூகமாக இருக்கக் கூடிய எந்த மக்களும் பொருளாதாரத்தில் மேம்பட்டதான வரலாறு இல்லை என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டு உற்பத்தி முயற்சிகளுக்கு அதீத முக்கியத்துவம் கொடுப்பது அவசியம்.

# இலங்கையில் பேஸ்புக் பாவனைக்கு அரசு தடை விதிக்க முயற்சி!

## குற்றஞ்சாட்டுகிறது எதிர்க்கட்சி




(கொழும்பு)

இலங்கையில் ஃபேஸ்புக்- சமூக வலைத்தளத்தை தடைசெய்வதற்கு அரசாங்கம் முயன்று வருவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டுகிறது.

அரசாங்கத்தின் மீதான விமர்சனங்களைத் தவிர்ப்பதற்காக அரசு இந்த நடவடிக்கையில் இறங்கவுள்ளதாகவும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

ஃபேஸ்புக் சமூக வலைத்தளத்தினால் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் ஏற்படுவதாக இலங்கை காவல்துறை கூறியுள்ளது.

குறிப்பாக, பெண் பிள்ளைகள் ஃபேஸபுக் பயன்படுத்தும்போது அவதானமாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் காவல்துறை பேச்சாளர் எஸ்எஸ்பி அஜித் ரோஹண கேட்டுக்கொண்டுள்ளார்.

“உலகில் மற்ற பல நாடுகளைப் போல இலங்கையிலும் குடும்பத் தகராறுகளுக்கும் தற்கொலைகளுக்கும் முக்கிய காரணமாகின்ற ஒரு விடயமாக ஃபேஸ்புக் மாறிவிடுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. பள்ளி செல்லும் மாணவர்கள் ஃபேஸ்புக் விடயத்தில் சுயகட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்” என்றார் காவல்துறை பேச்சாளர்.

கடந்த ஆண்டில் ஃபேஸ்புக் சம்பந்தப்பட்ட 30 முறைப்பாடுகள் காவல்துறைக்குக் கிடைத்துள்ளன.

அண்மைக் காலத்தில் இலங்கையில பள்ளி மாணவி ஒருவரினதும் இளம் யுவதி ஒருவரினதும் மரணங்களுக்கு ஃபேஸ்புக் தளமே காரணம் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

ஃபேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்கள் காரணமாக பல்வேறு சமூகப் பிரச்சினைகள் ஏற்படுவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் பல தடவைகள் கூறியுள்ளார்.

அவரது சகோதரரான பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும், ஃபேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்கள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக வந்துமுடியும் என்று கூறியுள்ளார்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட அரபுலக வசந்தம் என்ற புரட்சியைப் போல இலங்கையிலும் ஃபேஸ்புக் போன்ற சமூக இணைய தளங்கள் அரச எதிர்ப்புணர்வுகளைக் கிளறிவிடுமோ என்ற பயத்திலேயே அரசிடமிருந்து இவ்வாறான கருத்துக்கள் வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது.

“ஃபேஸ்புக் அரசாங்கத்திற்கு பெரும் பிரச்சினையாக மாறிவிட்டது.அதில் வருகின்ற பெரும்பாலான செய்திகள் அரசாங்கத்தை விமர்சிக்கின்றன. அதனால், ஃபேஸபுக் மீது வேறு சமூகப் பிரச்சினைகளைக் காரணம் காட்டி அதனைத் தடை செய்துவிடலாம் என்று அரசு முயற்சிக்கிறது'' என்றார் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோ.

“மரத்திற்குப் பின்னால் ஒருவர் மறைந்துநின்று துப்பாக்கியால் சுட்டார் என்பதற்காக. சுட்டவரைப் பிடிக்காமல் அந்த மரத்தை வெட்டிவிடுவது சரியாகுமா” என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

எனினும் ஃபேஸ்புக் மூலம் பல்வேறு சமூகப் பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அதனைக் கட்டுப்படுத்துவதன் மூலம் ஊடக உரிமை பறிக்கப்படுவதாக கருத்துக்கள் வரலாம் என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இதுபற்றி, கருத்துத் தெரிவித்த கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் தலைவர் பேராசிரியர் சிறி ஹெட்டிகே, “இலங்கையில் இளைஞர் யுவதிகளிடத்தில் தற்கொலைகள் 1990- களிலிருந்தே பெரும் பிரச்சினையாக இருந்துவருகிறது” என்றார்.

“சமூகத் தொடர்புகளை வளர்த்துக் கொள்வது என்பது சமூகத்துக்கு முக்கியமானது. அந்த சமூகத் தொடர்புகளை பயனுள்ளவையாக மாற்றுவதற்கான வழிமுறைகளைத் தான் நமது கல்வி முறையில் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். சமூகப் பிரச்சினைகளுக்கு ஃபேஸ்புக் போன்ற நவீன ஊடகங்கள் காரணம என்று கூறி அவற்றை கட்டுப்படுத்துவதோ அல்லது தடைசெய்வதோ ஒரு போதும் தீர்வாக அமையாது” என்றும் பேராசிரியர் சிறி ஹெட்டிகே கூறினார். (செ-11)

## கச்சதீவு திருவிழாவில் பங்கேற்குமாறு இந்திய யாத்திரிகர்களுக்கு அழைப்பு

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த தவக்கால யாத்திரைக்கு தமிழக மறைமாவட்ட ஆயருக்கு, யாழ்மறை மாவட்ட ஆயர் அழைப்பு விடுத்துள்ளார்.

வருடாந்த தவக்கால திருவிழாவிற்கான உத்தியோகப்பூர்வ அழைப்பினை, யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தமிழ்நாடு சிவகங்கை மறைமாவட்ட ஆயருக்கு அண்மையில் விடுக்கப்பட்டுள்ளதாக யாழ் ஆயர் இல்லத்தின் செயலாளர் தெரிவித்தார்.


யாழ். மறைமாவட்டத்தின் அழைப்புக்கான பதில் எதுவும் இதுவரையில், சிவகங்கை மறைமாவட்டத்திலிருந்து கிடைக்கப்பெறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த தவக்கால திருவிழா அடுத்த மாதம் 16 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

வருடாந்த திருவிழாவில் நாட்டின் அனைத்து பாகங்களிலிருந்தும் , தமிழகத்திலிருந்தும் அநேகமான பக்தர்கள் கலந்து சிறப்பிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### பூஜ்யமும் பூஜ்யரும்



பூஜ்யம். முழு எண் ஒன்று இருக்குமானால் அது பூஜ்யம் ஒன்று தான். ஏன் என்றால் மற்ற எண்ணெல்லாம் ஒரு பக்கம் ஆரம்பிக்கும். ஒரு பக்கம் முடியும். உருவம் கோணல் மாணலாக இருக்கும். 1 என்ற எண்ணை எடுத்துக் கொண்டீர்களானால் அதற்கு மேல் முனை, கீழ் முனை என்று இரண்டு இருக்கின்ற. 2 என்ற எண்ணை எடுத்துக் கொண்டீர்களானால் முன் முனை இருக்கிறது. பின் முனை இருக்கிறது. மற்ற எண்கள் இந்தப் பக்கம் அந்தப் பக்கம் வளைகின்றன. 3,4 ,5,6,7,8, என்று எல்லா எண்களும் கோணல் மாணலாக இருக்கின்றன. ஆனால் பூஜ்ஜியத்தை எடுத்துப் பாருங்கள் ஈ0டு அது எங்கே தொடங்குகிறதோ, அங்கே போய்த்தான் முடிகிறது.

பூஜ்ஜியம் தான் மழுமையாக எண். மற்ற எண்களுக்கு மதிப்பு வைத்திருக்கின்றோம். பூஜ்ஜியத்திற்கு மதிப்பு ஒன்றுமில்லை என நினைக்கிறோம். ஆனால் அதுவா ஒன்றுமில்லை? 1 என்ற எண்ணினை எடுத்துக் கொள்ளுங்கள். பூஜ்ஜியத்திற்குப்பின்னால் இந்த 1ஐ வையுங்கள். இப்போது அதன் மதிப்பு 10. பூஜ்ஜியமோ ஒன்றுமில்லை. ஒன்றுமில்லாததை மதித்து அதற்குப் பின்னால் 1ஐ வைத்தால் அதன் மதிப்பு பத்தாகி விட்டது. பூஜ்ஜியத்திற்கு ஒன்றுமே இல்லாத போதும் பூஜ்ஜியத்தை அலட்சியப்படுத்தி 1ஐ முன்னால் போட்டால் 1 இன் மதிப்பு பத்தில் ஒன்று(0.1)

அதுபோன்று இறைவன் நிறைவானவன். தனக்கென்று தனி மதிப்பு இல்லாதவன். யார் அவனை சேர்ந்தார்களோ அவர்களுடைய மதிப்பை உயர்த்தக் கூடியவன். யார் அவனை அலட்சியம் செய்து ஒதுக்கியிருக்கிறார்களோ அவர்கள் பத்தில் ஒன்றாக ஆகிவிடுவார்கள். ஏன் இறைநிலையை [illegible] அந்த இறைநிலை அளவிற்கு உயர்வார்கள். இறைநிலையை உணர்ந்து அதை மதிப்பவர்கள் பூஜ்யர் என்பார்கள்.

## முத்தம் கேட்ட நபருக்கு ரூ.1500 தண்டம் விதிப்பு

(கொழும்பு)

காதலர் தினத்தன்று யுவதியொருவரிடம் முத்தம் கேட்ட இளைஞன் ஒருவன் நீதிமன்றத்தின் உத்தரவின் பிரகாரம் 1500 ரூபாயை தண்டமாக செலுத்தியுள்ளார்.

வெள்ளவத்தையைச் சேர்ந்த யுவதியொருவர் தனது நண்பர்களுடன் காதலர் தினமான பெப்ரவரி 14 ஆம் திகதி காலி முகத்திடலுக்கு சென்றுள்ளார்.

அங்கு வந்திருந்த தெமட்டகொடையைச்சேர்ந்த இனந்தெரியாத இளைஞன், தனக்கு முத்தம் கொடுக்குமாறு யுவதியிடம் நேருக்கு நேர் கேட்டுள்ளார்.

இதுதொடர்பில் குறித்த யுவதி கோட்டை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து தெமட்டகொடையைச் சேர்ந்த இளைஞனை சந்தேகத்தின் பேரில் கைது செய்த பொலிஸார், பாலியல் தொந்தரவு குற்றச்சாட்டின் கீழ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே நீதவான் திலின கமகே 1500 ரூபாயை தண்டமாக செலுத்துமாறு உத்தரவிட்டார். (செ-11)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(பூநகரி)


கிளி/சுணாவில் அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30க்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அருளானந்தம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரி கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.தர்மரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக ஐ.எஸ்.ஏயின் வலயக் கல்வி உத்தியோகத்தர் பி.சிறிஸ்குமார், டி.எம்.ஓ .பூநகரி பிராந்திய வைத்தியர் பி.கோகுலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு பிரதேச விளையாட்டு விழா
# சென்.அன்ரனீஸ், யூத் வி.கழகம் சம்பியன்



நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவானது பிரதேச செயலர் ஆ.சிறி தலைமையில் அண்மையில் நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டிகள் வரிசையில் 100,200 மீற்றர் ஓட்டப் போட்டிகளும் 4X100 அஞ்சல் ஓட்டமும் உத்தியோகத்தர்களுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டியும் இடம்பெற்றன.

இவ்வருடத்திற்கான போட்டியில் 61 புள்ளிகளைப் பெற்று சென்.அன்ரனீஸ், யூத் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும் 54 புள்ளிகளைப் பெற்று சென்.ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும் 34 புள்ளிகளைப் பெற்று சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் மற்றும் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. இதில் சிறந்த தட மற்றும் கள வீரராக ஆர்.சந்திரகுமாரும் சிறந்த தட மற்றும் கள வீராங்கனையாக ஏ.அமலவட்சனாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக பிரதேச ஒருங்கிணைப்புக்குழு தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ சில்வேஸ்திரி அலென்ரின் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார். கௌரவ விருந்தினர்களாக நெடுந்தீவு பிரதே சபைத் தலைவர், நெடுந்தீவு கடற்படை அதிகாரி, நெடுந்தீவு பொலிஸ் அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்போட்டிக்கு யாழ்.மாவட்ட பயிற்றுநர்கள், விளையாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள், பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்கள். (க)

## யாழ்.மாவட்ட ஹொக்கி சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ். மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்திற்கு புதிய நிர்வாகிகள் தெரிவாகியுள்ளனர். யாழ். மாவட்டப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு கடந்த வெள்ளிக்கிழமை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் முன்னாள் தலைவர் நோயல் விமலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இத் தெரிவில் புதிய நடப்பாண்டு நிர் வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் டி.எஸ். சொலமனும் உப தலைவர்களாக உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ராணி மில்ஸ், மற்றும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் என்.ஜே. ஞானப்பொன்ராஜா ஆகியோரும் செயலாளராக உடுவில் மகளிர் கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் ப.தர்மகுமாரனும். பொருளாளராக யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் சீ.ஏ.அரவிந்தனும் போட்டி இணைப்பாளராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உப அதிபர் பிரான்சிஸ்சந்திரன் ஆகியோர் தெரிவானார்கள்.

அத்துடன் நிர்வாக சபை உறுப்பினர்களாகக் ஹொக்கி அணியிலுள்ள பாடசாலைகளின் உடற்கல்வி ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். (க-23)

## பெண்களுக்கான வலைப்பந்தாட்டம்; அல்வாய் நக்கீரன் சம்பியன்



பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட 2014 ஆம் ஆண்டுக்கான பெரு விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டி அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. 6 அணிகள் பங்குகொண்ட இப் போட்டிகளின் இறுதிப் போட்டிக்கு அல்வாய் நக்கீரன் வி.க. அணியும் பருத்தித்துறை ஐக்கிய விளை யாட்டுக் கழகமும் மோதின.

ஆரம்பம் முதலே போட்டியை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த அல்வாய் நக்கீரன் வி.க. 19:8 என்னும் புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று 2014 ஆம் ஆண்டுக்கான பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தில் சம்பியனாகியது. (க-23)

## வடமராட்சி பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்து; உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் சம்பியன்

வடமராட்சி வலயப் பாடசாலை களுக்கிடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அனைத்து வயதுப் பிரிவிலும் உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல் லூரி சம்பியனாகியது.

போட்டிகள் அண்மையில் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன. முதலில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் 2:0 என்ற நேர் செற்கணக்கில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி இந்த வருடச் சம்பியனாகியது. இந்தப் பிரிவில் மூன்றாமிடத்துக்காக இடம்பெற்ற ஆட்டத்தில் தொண் டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும், நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மோதின.

இதில் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம் 2:0 என்ற அடிப்படையில் வென்று வெற்றியைத் தமதாக்கியது. தொடர்ந்து இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியால யமும். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும் மோதின. இதில் அமெரிக்கன் மிசன் கல்லூரி 2:0 என்ற நேர் செற்களில் வென்று இந்த வருட சம்பியனாகியது.

இதில் இரண்டாமிடத்தை தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும் மூன்றாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன.

அடுத்து இடம்பெற்ற 17 வயது ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும், தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயமும் மோதின.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அணி 25:17, 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் 2:0 என்ற நேர் செற்களில் வென்று சம்பியனாகியது.

இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தைப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பெற்றுக் கொண்டது. (க-23)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

யாழ்.உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலைமைதானத்தில் அதிபர் மு.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினரும் கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளருமான கலாநிதி க.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினராக பழைய மாணவன் சி.சிவரூபன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக உரும்பிராய் மேற்கு கிராமசேவையாளர் செ.செல்வச்சந்திரன் கலந்து கொண்டு சிறப்பிப்பார். (அ-2)

## சதுரங்க சுற்றுப்போட்டி பிற்போடப்பட்டுள்ளது

இணுவில் பொதுநூலகத்தில் நேற்று நடைபெற இருந்த சதுரங்க சுற்றுப்போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)





கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வையும் மற்றும் வெற்றியீட்டிய இல்லத்துக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் மற்றும் விருந்தினர்கள் இணைந்து கேடயம் வழங்கி வைப்பதையும் அருகில் எஸ்.தனபாலசிங்கம் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரெயின் அபாரம்: ஆஸியை அடக்கி பழி தீர்த்தது தென்னாபிரிக்கா

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 231 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலியா அணி அங்கு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இத்தொடரின் முதல் டெஸ்டில் ஆஸி அணி வெற்றி பெற்றிருந்த நிலையில், தொடரின் 2-வது டெஸ்ட் போட்டி கடந்த 20-ம் திகதி போர்ட் எலிசபெத்தில் ஆரம்பமானது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு, டி வில்லியர்ஸ் (116), ஜே.பி டுமினி (123) ஆகியோரின் சதங்கள் கை கொடுக்க தமது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 423 ஓட்டங்களைக் குவித்தது.

ஆஸி அணியின் பந்துவீச்சில் நேதன் லயன் 130 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய ஆஸி அணி, தென்னாபிரிக்க வீரர்களின் பந்துகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் 57 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 246 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.



துடுப்பாட்டத்தில் டேவிட் வோர்னர் 70, ஸ்ரீபன் ஸ்மித் 49 ஓட்டங்களை அதிகபட்ச ஓட்டங்களாகப் பெற்றுக் கொடுத்தனர்.

தென்னாபிரிக்காவின் பந்து வீச்சில் மோர்கல், பிலாண்டர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

177 ஓட்டங்கள் முன்னிலையில் தமது 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் 3-ம் நாள் ஆட்ட நேர முடிவில் 47 ஓவர்களைச் சந்தித்து 4 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றைய 4-ம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவ்வணி, ஹசிம் அம்லாவின் ஆட்டமிழக்காத 127 ஓட்டங்களின் துணையுடன் 64 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 270 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தி, ஆஸி அணிக்கு 448 ஓட்டங்கள் என்ற இமாலய வெற்றியிலக்கை நிர்ணயித்தது.

இவ்வெற்றியிலக்கை நோக்கி தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த ஆஸி அணிக்கு டேவிட் வோர்னர் -கிறிஸ் றோஜர்ஸின் ஆரம்ப சத இணைப்பாட்டம் கைகொடுத்தது.

இருவரும் தமக்கிடையில் 126 ஓட்டங்களைப் பகிர்ந்த வேளையில் ஆரம்ப இணை பிரிந்தது. சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த வோர்னர் 66 ஓட்டங்களுடன் டுமினியின் பந்தில் எல்பிடபிள்யூ ஆனார்.

இவரின் ஆட்டமிழப்பின் பின்னர் ஆஸி அணியின் விக்கெட்டுக்கள் மளமளவெனச் சரிந்தது. குறிப்பாக டேல் ஸ்ரெயினின் பந்து வீச்சில் அனல் பறந்தது.

எனினும் தனியொரு வீரராக ஆரம்ப வீரர் றோஜர்ஸ் போராடினாலும் அவருக்கு இணையாக எந்தவொரு வீரரும் நிலைத்து நிற்காமையால் அவரின் போராட்டமும் வீணானது.

இறுதியில் ஆஸி அணியின் 2-வது இன்னிங்ஸ் 73.4 ஓவர்களில் முடிவுக்கு வந்தபோது, அவ்வணி 216 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 231 ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்தது.

துடுப்பாட்டத்தில் ஆஸி அணி சார்பாக கிறிஸ் றோஜர்ஸ் 107 ஓட்டங்களைக் குவித்தார்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் டேல் ஸ்ரெயன் 55 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், பிலாண்டர் 39 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு



சகல துறைகளிலும் ஜொலித்த ஜே.பி.டுமினி தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 3-வதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி வரும் மார்ச் முதலாம் திகதி கேப் டவுணில் ஆரம்பமாகிறது. (க)

## இலங்கைக்கு எதிரான...

லண்டனில் இருந்து கெலும் மக்ரே தாணொளி மூலம் நேரடியாக மாணவர்களிடம் உரையாடினார்.

சனல் 4 தொலைக்காட்சியின் ஆவணப்பட இயக்குநர் கெலும் மக்ரே; மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் கேட்ட பல கேள்விகளுக்கு விரிவாகவும் பொறுமையாகவும் பதிலளித்தார்.

மாணவர்களின் கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில்,

அமெரிக்கா இந்த தீர்மானத்தினை கடந்த முறை பல நாடுகளின் உதவிகளோடும் கொண்டுவர முயற்சி செய்தும், அவர்களால் அந்த தீர்மானத்தினை ஓரளவுக்கு மேல் கொண்டு செல்ல முடியவில்லை. காத்திரமான தீர்மானத்தினை அவர்களால் கொண்டுவர முடியாமல் இருந்தது.

ஆனால், இந்த முறை அப்படியான காத்திரமான தீர்மானத்தினை கொண்டு வருவது எல்லோருடைய எண்ணமாகவும் இருக்கின்றது. அதை நோக்கி அவர்கள் செய்வார்கள். அதற்கான வேலைகளை நாங்கள் செய்ய வேண்டும்.

கடந்த முறை ஐ.நா கூட்டத் தொடர் நடந்தபோது, மாணவர்களின் போராட்டம் முழுக்க முழுக்க இந்திய அரசை இலங்கைக்கு எதிராக வாக்களிக்கச் செய்தது போன்ற அழுத்தங்களையும், நிர்ப்பந்தங்களையும் ஏற்படுத்தியது.

இம்முறையும் சர்வதேச அளவில் இப்படியான அழுத்தங்கள் இருக்க வேண்டும். அதனை நோக்கியதாக மாணவர்களாகிய உங்களுடைய பணிகளும் இருக்க வேண்டும்.

மார்ச் மாத இறுதியில் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமை கூட்டத்தொடரில் தமிழக மாணவர்கள் இந்தியாவிற்கு தொடர் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும், இலங்கையில் பன்னாட்டு விசாரணை நடைபெற அமெரிக்கா மற்றும் இந்தியாவின் பங்கு மட்டுமல்ல அவர்களையும் உடன் அழைத்துச் செல்லுதல் என்பது மிக முக்கியமானது என்றும் கூறினார்.

உலக அரங்கில் அதுவும் தெற்காசியப் பிராந்தியத்தில் பிராந்திய அரசியல் ரீதியாக இந்தியாவுக்கு ஒரு முக்கியமான பங்கு இருக்கின்றது. ஆனால், இந்தியாதான் இலங்கை மீது நடவடிக்கை எடுக்க முடியாதவாறு முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது. இந்தியாவும் அமெரிக்காவும் இம்முறை ஒரு உறுதியான நடவடிக்கை எடுக்க மாணவர்களாகிய நீங்கள் ஆவன செய்ய வேண்டும் என வலியுறுத்தினார்.

இலங்கையில் இருக்கக் கூடிய சிங்கள மனித உரிமை ஆர்வலர்களும் அங்கு தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை பதிவு செய்து கொண்டு இருக்கின்றார்கள்.

எனவே, ஒரு ஊடகவியலாளனாக அங்கு நடந்த அநீதிகளை பதிவு செய்வதுதான் எனது வேலை. ஏற்கெனவே என்னை புலிகள் இயக்க ஆதரவாளனாக இலங்கை அரச தரப்பினரும், இன்னும் பலரும் சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள்.

நான் மீண்டும் மீண்டும் சொல்வது என்னவென்றால், இலங்கையில் தமிழ் மக்களினுடைய போர் 2009 உடன் முடிந்து விடவில்லை. நீங்கள் எல்லாம் போர் முடிந்து 5 ஆண்டுகள் ஆன பிற்பாடும் நீதி கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தில் மட்டுமே பேசுகின்றீர்கள். ஏறக்குறைய ராஜபக்ஷ சொல்வது இதனைத்தான். அவரின் மொழியும் இதைப் போலத்தான் இருக்கின்றது.

போர் முடிந்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டது இன்னும் இதனைப் பேசிக் கொண்டு இருக்கின்றீர்கள். எனவே, ராஜபக்ஷவின்வலையில்விழுவதைப் போல நீங்கள் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.


எப்போதும் நியாயவான்களாக உண்மைக்கும் நீதிக்குமான செயல்களை மாணவர்களாகிய நீங்கள் செய்து கொண்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதேவேளை இறுதியாக இலங்கையை இம்முறை ஐ.நா.வில் உலக நாடுகள் தண்டிக்க தம்மாலான முயற்சிகளை செய்வோம் என மாணவர்கள் உறுதி கூறினர்.

திரையிடல் நிகழ்ந்த அரங்கின் பின் வரிசையில் புலனாய்வுத் துறையினர் அமர்ந்திருந்து பல விடயங்களையும் குறிப்பெடுத்துக் கொண்டனர். (செ-11)

## தோனி இல்லாவிட்டாலும் இந்திய அணி வலுவானது

### மிஸ்பா



தோனி இல்லாவிட்டாலும் இந்தி அணி வலுவானது என பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா குல்கக் தெரிவித்துள்ளார்.

5 அணிகள் பங்குபற்றும் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிகள் பங்காளதேஷில் நாளை ஆரம்பமாகிறது. இத்தொடர் குறித்து பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல்-ஹக் அளித்த பேட்டி வருமாறு,

ஆசிய கிண்ண போட்டியில் இருந்து தோனி விலகி இருப்பதன் மூலம் அவரது அனுபவத்தையும், தலைமைத்துவத்தையும் இந்திய அணி தவறவிடுகிறது. அதேநேரத்தில் அவருக்கு பதிலாக விராட் ஹோலியை இந்திய அணியின் தலைவராக்கியிருப்பது பொருத்தமான தேர்வுதான்.

தோனி இல்லாவிட்டாலும் இந்திய அணி தொடர்ந்து வலுவானதாகவே இருக்கிறது. இந்தியா மட்டுமல்ல, ஆசிய கிண்ண போட்டியில் பங்கேற்கும் அனைத்து அணிகளும் சவாலானவை என்று நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன்

தென்னாபிரிக்க, இலங்கை அணிகளுக்கு எதிரான ஒருநாள் தொடர்களை கைப்பற்றிய நாங்கள் அதே வெற்றி வேட்கையுடன் ஆசிய கிண்ண போட்டிகளில் பங்கேற்கிறோம். அதன்காரணமாக இந்திய அணியையும் எங்களால் தோறகடிக்க முடியும் என்று நம்புகிறோம். இவ்வாறு மிஸ்பா கூறினார். (க)

## இலங்கைக்...

குழுவின் இலங்கை தொடர்பான தீர்மானத்தை கொண்டுவர அமெரிக்க அனுசரணை வழங்குகிறது. ஐ.நா ஆதரவுடன் இலங்கையின் போர்க் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தும் வகையில் தீர்மானத்தை கொண்டுவர இணை அனுசரணை வழங்கப்படும் என பிரித்தானியா தெரிவித்திருந்தது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை இராணுவம் போர் குற்றங்களை இழைத்ததாக மனித உரிமை அமைப்புகள் குற்றம் சுமத்தி வருகின்றன. எனினும் இலங்கை அரசாங்கம் அதனை மறுத்து வருகிறது.

அமெரிக்கா அனுசரணையில் கொண்டு வரப்படும் தீர்மானத்திற்கு இலங்கையின் மிகப்பெரிய அயல நாடான இந்தியா உட்பட பல உறுப்பு நாடுகள் ஆதரவு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எவ்வாறாயினும் இலங்கை சம்பந்தமான சர்ச்சைக்குரிய போர் தவிர்ப்பு வலயம் ஆவணப்படத்தை தடை செய்ய இந்தியா எடுத்த முடிவு பாராட்டத்தக்கது என அமைச்சர் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் கைப்பாவையாக செயற்படுவதாக இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தும் குறித்த ஆவணப் படத்தின் இயக்குநருக்கு இந்தியா விசா வழங்க மறுத்ததையும் அமைச்சர் நினைவுகூர்ந்துள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்கால்...

வில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மேலும் தெரிவிக்கையில,

யுத்தம்கடந்த 2009 ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்பு கடந்த 4 வருடங்களாக சோமாலிய கடற்கொள்ளையர்கள் போன்று தமிழர் தாயகத்திலுள்ள பூர்வீக நிலங்கள் அரச ஆதரவுடன் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 60 ஆண்டுகளை விட இந்த 4 ஆண்டுகளில் தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற நில அபகரிப்பு அதிகமாக காணப்படுகின்றது. தமிழர்கள் சொந்தமான இடங்களை விட்டு இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கி வாழ்ந்து வரும் நிலையில் அவர்களுக்குச் சொந்தமான நிலங்களில் இராணுவத்தினர் ஆடம்பர விடுதிகளை அமைப்பதும் கோலஃப் மைதானம் அமைப்பதிலும், நீச்சல் தடாகங்கள் அமைப்பதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். வலி.வடக்கில் 750 ஏக்கர் காணியில் கோல்ஃப் மைதானத்தினை இராணுவத்தினர் அமைத்துள்ளனர்.

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் காணி அபகரிப்பு தொடர்பில் பலரிடம் எடுத்துக் கூறியுள்ளோம்."

சர்வதேச சந்தர்ப்பம் ஒவ்வொரு நாளும் கிடைக்குமென்று நாம் நம்ப முடியாது. அந்த சர்வதேச சந்தர்ப்பம் கிடைக்கும் போது சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் கிடைத்த சந்தர்ப்பங்களைத்தவற விட்டதன் விளைவே இப்போது இடம்பெறும் காணி அபகரிப்பு உள்ளிட்ட எமது இனத்துக்கெதிரான அடக்குமுறைகளுக்குக்காரணம்.

தமிழர் தாயகத்தில் இழந்த நிலத்தை நாம் மீட்பது அவசியம். தமிழர்களின் நிலம் மீட்கப்பட வேண்டும்.

அவர்களுக்கென்று ஒரு பிரதேசம் என்று சொல்லும் உரிமை நிலத்தில் தான் தங்கியுள்ளது. எனவே சொநத நிலம் இருக்க வேண்டும். எமது தமிழினத்தை அழிக்க இராணுவமும், பௌத்த தீவிரவாத அமைப்புக்களின் ஊடாக இந்த அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இதனைத்தடுத்து நிறுத்த நாம் தொடர்ந்து போராடுவோம். (செ-6)

## பால்மாவின்...

பட்டது.

தேர்தலுக்கு பின்னர் அறவிடப்படும்வரி அதிகரிக்கப்பட உள்ளதால், பால் மாவின் விலைகள் அதிகரிக்கும் என அந்த தகவல்கள் மேலும் தெரிவித்தன.

அரசு கடந்த 2-ம் திகதி ஒரு கிலோகிராம் பால் மாவின் விலையை 152 ரூபாயினால் அதிகரித்ததுடன் 400 கிராம் பால் மாவின் விலைகளை 61 ரூபாயினால் அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இலங்கைக்...

வாசுதேவ நாணயக்கார வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் அரசாங்கத்தை மாற்ற அழுத்தங்களை கொடுக்க அமெரிக்கா இந்த தீர்மானத்தை பயன்படுத்தும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

தெற்காசிய நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடும் முதற்படியாகவே அமெரிக்கா இலங்கையில் உள்விவகாரத்தில் தலையீடு செய்கின்றது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா மனித உரிமைஆணைக 19 ஆம் பக்கம் பார்க்க..

## பிரபாகரனின் ஆவி...

அதிகாரம் கிடையாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், வட மாகாணத்திலிருந்து இந்தியாவுக்கு நேரடி விமான மற்றும் கப்பல் சேவையினை ஏற்படுத்துவது தொடர்பான கோரிக்கை குறித்து பொது பல சேனாவின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மேலும் தெரிவித்ததாவது,

வட மாகாணத்திற்கு தனியான கப்பல் சேவைகளை ஆரம்பிப்பதாலோ, விமான சேவைகளை ஆரம்பிப்பதாலோ தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. மாறாக முறையானதும் தூர நோக்குடனுமான வேலைத் திட்டங்களே முன்னெடுக்கப்பட வேண்டும்.

மூன்று தசாப்தங்களாக நாட்டில் நிலவிய யுத்தத்தினால் இன, மத பேதமின்றி எல்லோரும் பாதிக்கப்பட்டார்கள். அது மாத்திரமல்லாமல் வட, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் பாரிய இன்னல்களை எதிர்நோக்கினார்கள். எனவே அந்த நிலைமை மீண்டும ஏற்படும் வகையில் செயற்படக்கூடாது.

விக்னேஸ்வரனின் செயற்பாடுகளும் கருத்துக்களும் மிகவும் பயங்கரமானதும் பாரதூரமானதுமாகவே உள்ளன. இவ்வாறான செயற்பாடுகளால் நாட்டில் மீண்டும் பிரிவினைவாதமும் தேவையற்ற பிரச்சனைகளுமே ஏற்படும் எனவே அதற்கு ஒரு போதும் இடம் கொடுக்கக் கூடாது.

வட மாகாணத்திற்கான தனியான விமான மற்றும கப்பல் சேவை என்ற பேச்சுக்கே இடமில்லை. அதனை ஒரு போதும் நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அதே போன்று பிரபாகரனின் ஆவியாக செயற்பட்டுவரும் விக்னேஸ்வரனின் செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கம் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகளின் இலக்கை நிறைவேற்றும் வகையிலேயே விக்னேஸ்வரனின் செயற்பாடுகள் காணப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகளானது தமிழ் மக்களை மீண்டும் முப்பது வருடங்களுக்கு பின்னோக்கிக் கொண்டு செல்லும் வகையிலேயே அமையும்.

வட மாகாணத்தை தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்து ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களிடம் இனவாதம் கிடையாது. விக்னேஸ்வரன் போன்றவர்களின செயற்பாடுகளாலும் கருத்துக்களாலும் அந்த ஒற்றுமை சீர்குலையும் அபாயம் உள்ளது. எனவே, இத[illegible] உணர்ந்து செயற்பட வேண்[illegible]ம் எனவும் அவர் தெரிவித்தார். (எ-2)

## ஆப்கான்...

வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தால் ஆப்கானிஸ்தான் அதிபர் கவலையடைந்துள்ளதாகவும் ஆகவே தான் இலங்கைக்கு வர இருந்த விஜயம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அதிபர அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் அதிபர் தேர்தல் அடுத்த மாதம் நடைபெறவுள்ள நிலையில் இந்த பயங்கரமான தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இந்த தாக்குதலில் நூற்றுக்கணக்கான கிளர்ச்சியாளர்கள் பங்கேற்றதாக இராணுவ ஜெனரல் மொஹமது ஜாகீர் அசிமி தெரிவித்தார்.

பாகிஸ்தானுடனான எல்லைக்கு அருகாமையில் நடைபெற்ற இந்த தாக்குதலில் தாக்குதலை நடத்திய ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாகவும், அத்தோடு 7 படையினரை பிடித்து வைத்துள்ளதாகவும் தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

2014 ஆம் ஆண்டின் இறுதியில் வெளிநாட்டுபடையினர் ஆப்கானிலிருந்து வெளியேறவுள்ள நிலையில், ஆயுததாரிகளின் தாக்குதல் கடந்த சில மாதங்களாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஆளில்லா...

னமே இந்த செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படவிருக்கின்றது.

உடவல வனாந்தரதத்தில இடம் பெறுகின்ற சட்ட விரோத செயற்பாடுகளை கண்டறிவதற்காக இந்த விமானம் நேற்று ஞாயிறுக்கிழமை அனுபபிவைககப்பட்டது.

இவ்வைபவத்தில்வன ஜீவராசிகள் அமைச்சர் விஜித்த விஜய முனி சொய்சாபங் கேற்றார் என்று வனஜீ வராசிகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (செ-11)


அரச துறை, தனியார் துறை மற்றும் NGOகளில் தற்போது கோரப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள் பற்றிய வழிகாட்டல், ஆலோசனை மற்றும் உதவிகளுக்கு..

கோலாசிற்றி 021 320 2787 தொழில் வங்கி

224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடி சந்திக்கு அருகில்)

இனி நாம் இருக்கிறோம் நேரில் வரவும்

### இந்து மதம் போதிக்க ஆசிரியர்கள் அவசரமாகத் தேவை

துன்னாலைப் பகுதியில் 28.02.2014 அன்று ஆரம்பமாக வுள்ள இந்து இலவச அறநெறிப் பாடசாலைக்கு இரண்டு ஆசிரியைகள் உடன்தேவை.

கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும்

**1. இந்து மத போதனாசிரியர்:-வகை 1**

மாணவர்களிற்கு புறஜெக்ரர் மூலம் கவர்ச்சியாக இந்து சமய தத்துவங்கள், நீதி நூல்கள், அறநெறிகள் போதிக்கக் கூடிய பட்டதாரி ஆசிரியைகள் தேவை. வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் பணி

**2. இந்து மதப் போதனாசிரியர்கள்:-வகை 2**

தேவாரம், திருவாசகம், திருமுறைகள் பக்திப் பாடல்களை உரிய முறையில் பயின்று பட்டம் பெற்ற ஆசிரியைகள் தேவை. வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் பணி.

நேர்முகத் தேர்வு:-26.02.2014
பி.ப 3 மணி. பின்வரும் முகவரியில் இடம்பெறும்.

(சி-6577)

MS.V. இந்துஜா
பொதுமுகாமையாளர்
(கௌரவ இயக்குநர் சபை கட்டளைப்படி)
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 021 221 9016, 021 568 9090



### 2 மணித்தியாலத்தில் கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள். 077 908 6737

GUNAA BEST PC
52, Hospital Road, Jaffna.

இப்பொழுது GUNAA BEST PC இல் Quick Service 2 மணித்தியாலத்தில் கணினிகளை திருத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Computer Repair Laptop and motherboard Repair

### ALLIANCE FRANÇAISE DE JAFFNA (AF)

af

பிரெஞ் மொழியை பிரெஞ் முறையில் கற்றுக்கொள்ளுங்கள்



யார் AF இல் FRENCH படிக்க முடியும்?

திருமணம் மூலம் France, Canada... செல்வோர், வெளிநாடுகளில் தொழில் புரிய, தொடர்ந்து French படிக்க / கல்விகற்க செல்வோர், French கற்கவிரும்புவோர். உலகில் French கற்பிப்பதற்கு French அரசாங்கம் அங்கீகரிக்கும் ஒரேஒரு சர்வதேச நிறுவனம் AF மட்டுமே

- Speaking, writing, listening & reading திறமைகளில் நன்கு தேர்ச்சிபெற...
- *Videos* for listening & speaking practice : "*Bienvenue en France*" Episode N°. 1,2,3,4... மேலும் Audio CDs (முற்றிலும் இலவசமாக பயிற்சி பெறலாம்)
- வகுப்பறையில் வழங்கப்படும் பாடப் பிரதிகள் (Photocopies) முற்றிலும் இலவசம். மாணவர்களுக்காக பிரமாண்டமான நூலக வசதிகள், DVD s...
- அதியுயர் தகைமைகளையுடைய பல ஆசிரியர்களை கொண்ட ஒரே நிறுவனம் எமதே. வருடம்தோறும் நூற்றுக்கணக்கானோர் இங்கு படித்து செல்கிறார்கள்
- **Exams, Certificates and International Diplomas**
  1. Elementary level - 1 (6 Months,100 Hours CERTIFICATE Course)
  2. International Diplomas : DELF A1, A2

எங்கு French படித்தாலும் DELF பரீட்சைகளை எமது AF இல் மட்டுமே எழுத முடியும். மேலும் உலகில் AF இல் கற்பவர்களுக்கு மட்டுமே குறைந்த கட்டணத்தில் அனுமதி. யாழில் வேறு இடத்தில் எமது Branches இல்லை

- கலை, கலாசார நிகழ்வுகளுடன் சான்றிதழ் வழங்கும் வைபவங்கள்...
- Letter in French : 6 மாதத்தினை முடிக்காதோருக்கு / Embassy க்கு (இலவசம்)
- Translations in French: பிறப்பு, இறப்பு & திருமண சான்றிதழ்கள்.

(5659)

கவனிக்கவும் : சர்வதேச பரீட்சைகள், Certificates ஐ உலகில் AF மட்டுமே வழங்கி வருகிறது. யாழில் AF 1976 முதல் இயங்கிவருகிறது. Embassy இலும் France இலும் எமது Certificates மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றன.

புதிய வகுப்புகளுக்கு உடன் பதிவுசெய்யுங்கள்... வடமாகாணத்தில் ஒரே முகவரி தான்..61,Kachcheri-Nallur Road, Jaffna 021 222 8093 (கச்சேரியை அடுத்து வரும் சந்தியில்/Racca வீதியில் British council அருகில்)

### Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
021 753 8330, 0777 151 101

(C-6575)

### வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

வடமாகாணத்தின் பொதிகள் சேவை துறையின் முன்னோடிகள்

நேரடி முகவரிடம் ஒப்படைப்பதன் மூலம் காலதாமதத்தையும் அதிக கட்டணம் செலுத்துவதையும் தவிர்த்துக்கொள்ளுங்கள்

அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
இல.10, கஸ்தூரியார் வீதி, (புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி)
யாழ்ப்பாணம். 021 222 3536

(C-6576)



- இலட்சக்கணக்கான வாடிக்கையாளர்களைக் கொண்டு
- ஆகாய, கடல் மார்க்கமாக
- அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன்
- மறைமுக கட்டணம் ஏதுவுமின்றி
- முக்கிய ஆவணங்கள், மிளகாய்த்தூள், கருவாடு, எண்ணெய் வகைகள், அனுமதிக்கப்பட்ட மருந்துப்பொருட்கள், உடுபுடவைகள், பால்மா வகைகள் என அனைத்துப்பாவனைப் பொருட்களையும்,
- 3-4 நாட்களில் உலகின் எப்பாகத்திற்கும் குறித்த முகவரியில் ஒப்படைக்கின்றோம்.

வெளிநாடுகளிற்கான பொதிகள் சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் முன்னணி நிறுவனம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.